# திறவுகோல்

2053 மாசி

மாத இதழ்



வெளியீடு

மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு சேல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# தமிழே உயிரே !...

செந்தமிழே உயிரே உனைப்பாடிட
சிந்தை மகிழ்ந்திடுதே

எந்தமிழே மறைநான்கிலும் உந்தன்
எழிலும் நிறைந்திடுதே

கந்தமணம் தமிழ்வீசும் தினம்
எங்கள் சத்தப் பாடலிலே

சொந்தமொழி எங்கள் தந்தைமொழி
என்று தினமும் பாடிடுவோம்!

கம்பனவன் அழகுக் கவிதையைப் பாடி
உன்னைப் போற்றிட்டார்

நம்மவளாய் தமிழ் வாழ்ந்திடவே
அவர் கனிபோல் காத்திட்டார்

எம்மொழியே நீயும் எம்முயிரே
அந்த இறைவன் காதலியே

செம்மொழியே நல்ல செந்தமிழே
உன்னைச் சிரமேல் தாங்கிடுவோம்!

வள்ளுவனார் பெற்ற நல்மகளே
வாழ்வில் இன்பம் நல்கிடுவாய்
உள்ளம் குளிர்ந்து கலாபமயில்
உருண்டு மனதினுள் ஆடிடுதே
தமிழே அமுதே தேன்சுவையே
தரணியில் வாழும் உயிர்களுக்கு
அமிழ்தாய் இனிக்கும் பலாச்சுளையே
அருளை வழங்கும் தமிழ்த்தாயே....!

# ரணம்...

புழு சீண்டும்
இறந்த பிரேதத்தின் உடலில்
இன்னும் மீதமிருக்கிறது
அனுபவிக்காத ஆசையின்
தீராத ரணம்...

–

இளங்கவி
நடுநாட்டுத்தமிழன்
(ச.வாசுதேவன்)
முதுகலைத்தமிழ் முதலாமாண்டு
தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்
7094762430

அட்டைப்படம்:
K. **புஷ்பா**, MCA,
கா.புதூர்

# நானொரு நாத்திகன் – பகத்சிங்

போராளிகள் நான் என்கிற சுயநலமில்லாமல் நாட்டுக்காக வாழ்ந்தவர்கள் நாட்டுக்காகவே மடிந்தவர்கள். அவர்களை தீவிரவாதிகள் என்று முத்திரைக் குத்திவிடலாம் அவர்கள் கையிலெடுக்கும் பயங்கரவாதத்தின் நோக்கம் என்னவென்று பார்க்க வேண்டும். தான் ஏற்றுக் கொண்ட கொள்கைக்காக உயிர் விடுபவர்கள் மகாத்மாக்களைவிடவும் மேலானவர்கள். ஒடுக்கப்பட்ட இனத்தின் ஒட்டுமொத்தக் குரலாகத்தான் அவன் குரல் ஒலிக்கிறது. எதிரிகளின் பலமே அவனை ஆயுதம் ஏந்த வைக்கிறது. தனது லட்சியத்துக்காக திருமண பந்தத்தைக் கூட வைராக்கியமாக துறந்துவிடுகிறான். பதினெட்டு இருபது வயதில் தாய்நாட்டுக்காக உயிரையே அர்ப்பணிக்கும் துணிச்சல் யாருக்கு வரும். போராளிகள் என்பவர்கள் எரிமலையாக உள்ளுக்குள் குமுறிக் கொண்டிருப்பவர்கள் தான். எப்போது வேண்டுமானாலும் மரணத்தை முத்தமிட தயாராய் இருப்பவர்கள். பிரிட்டிஷ் ராணுவத்துக்கு சுபாஷ்சந்திரபோஸ் போன்றோர் ராணுவ ரீதியாக நெருக்கடிகள் தரவில்லையென்றால் அரை நூற்றாண்டுகள் கழித்தே இந்தியா சுதந்திரம் பெற்றிருக்கும்.

1857ஆம் ஆண்டு நடந்த சிப்பாய் கலகத்தைத்தான் சாவர்க்கர் முதல் இந்திய சுதந்திரப் போராக அடையாளப்படுத்தினார். இந்திய விடுதலைப் போராட்டத்தில் 1857 முதல் 1931 வரை தீவிரவாதம் அசுர வளர்ச்சி கண்டது. துப்பாக்கி ஏந்தியிருக்கும் பிரிட்டிஷ் வீரர்களுக்கு முன்னால் நீதி, நேர்மை, நியாயம் பேசிக் கொண்டிருக்க முடியுமா? நீங்கள் குருவி சுடுவது போல் சுட்டுப் பழகுவதற்கு இந்தியர்கள் தானா கிடைத்தார்கள். இந்த கூற்று நியாயமானது தானே. 1885ஆம் ஆண்டு வெள்ளைக்காரர்களால் காங்கிரஸ் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து வெள்ளைக்காரர்களுக்கு ஒத்துஊதுவது தான் அந்த இயக்கத்தின் தலையாய நோக்கமாக இருந்தது. இந்தியர்கள் அனைவரும் பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்ப்பதில் ஒன்றுபட்டுவிட்டனர் என்கிறபோது இனியும் இந்த மண்ணை நாம் சொந்த கொண்டாட முடியாது என தீர்மானித்தனர். ஆனாலும் அவர்கள் அதிகாரத்தை இந்தியர்கள் கையில் அளித்துவிட்டுப் போகவும் தயாராக இல்லை.

பிரிட்டிஷார் இந்திய மக்களை பிளவுபடுத்த முயற்சித்தனர். அதற்கு மூளையாக கர்சன் பிரபு செயல்பட்டார். வங்கப் பிரிவினை உண்டானது. இந்துக்கள் அதிகமாக உள்ள பகுதி மேற்குவங்கம் என்றும், முஸ்லிம்கள் அதிகம் உள்ள பகுதி கிழக்கு வங்கம் என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. 1906ல் யுகாந்தர் என்ற வங்கப் பத்திரிகை இந்திய விடுதலைக்கு ஆயுதத்தை கையிலெடுப்பதைவிட வேறு தீர்வு இல்லை என்றது. இந்தியாவில் தீவிரவாதக் குழுக்கள் 1902ல் இருந்து வலுப்பெற ஆரம்பித்தன. சுசீந்திரசன்யாள் என்பவர் இந்துஸ்தான் ரிபப்ளிக் ஆர்மி என்ற அமைப்பை

ஏற்படுத்தினார். அந்த இயக்கத்தைச் சேர்ந்த ராஜ்பிஹாரிபாசு டில்லியில் வைத்தே வைஸ்ராயை தாக்க முயன்றான். இப்படி நாட்டில் தீவிரவாதம் தலையெடுக்க ஆரம்பித்தது. தீவிரவாதிகளை ஆதரிக்கும் காங்கிரஸ் கட்சியினரை கட்சியிலிருந்து கட்டம் கட்டும் வேலை காங்கிரஸ் இயக்கத்துக்குள்ளேயே நடந்தது. வங்கத்தைப் போல் காங்கிரஸ் கட்சியும் தீவிரவாதிகள் மிதவாதிகள் என இரண்டாகப் பிளவுபட்டது. அத்தகைய சூழலில் தான் காந்தி காங்கிரஸின் தலைமை ஏற்றார். 1919ல் ஜாலியன்வாலாபாக் சம்பவத்தை எதிர்த்து நடந்த போராட்டத்தில் தான் முதல்முறையாக பனிரெண்டு வயதேயான பகத்சிங்க கலந்து கொள்கிறான்.

மகாத்மா என்பறகாக அவர் சொல்வதையெல்லாம் வேதவாக்காக எங்களால் கருத முடியாது என்பது தான் பகத்சிங்கின் கொள்கையாக இருந்தது. 1920-21ல் காந்தி அறிவித்த ஒத்துழையாமை இயக்கம் மக்கள் புரட்சியாக வெடித்தது. இன்னும் ஒரு வருடத்தில் இந்தியா விடுதலை அடைந்துவிடும் என்று முழங்கிய காந்தி சௌரிசௌராவில் போலீஸ் தடியடியை எதிர்த்து வெகுண்டு எழுந்த மக்கள் 22 காவலர்களை காவல் நிலையத்தில் வைத்து பூட்டி கொளுத்திய போது அதிர்ச்சியுற்ற காந்தி வன்முறை மேலும் பரவாமல் இருக்க ஒத்துழையாமை இயக்கத்தை காங்கிரஸ் கைவிடுவதாக அறிவித்தார். இந்த முடிவை கடுமையாக எதிர்த்த ஜவர்ஹலால் நேரு இந்தியாவின் விடுதலை இந்த முடிவால் இன்னும் ஐம்பது ஆண்டுகள் தள்ளிப்போகும் என்றார். காந்தியின் செயல்பாடுகள் பிடிக்காமல் பலர் கட்சியிலிருந்து வெளியேற ஆரம்பித்தனர். அப்படி வெளியேறிய கர்த்தார்சிங் என்பவன் இந்துஸ்தான் ரிபப்ளிக் ஆர்மியில் தன்னை இணைத்துக் கொள்கிறான்.

புரட்சியாளர்களை ஒன்றுதிரட்டி அவர்களுக்கு ஆயுதங்களை வழங்கி லாகூரில் திடீரென புரட்சி செய்ய திட்டமிட்டான் கர்த்தார்சிங். இதனை பிரிட்டிஷ் காவல்துறை எப்படியோ மோப்பம் பிடித்துவிட்டது. முதல் லாகூர் சதி வழக்கில் புரட்சியை தூண்டியதற்காக கர்த்தார்சிங்குக்கு மரண தண்டனை அளித்து தீர்ப்பளித்தது நீதிமன்றம். அவனை தூக்கிலிட்டபோது கர்த்தார்சிங்குக்கு வயது பதினெட்டு தான் ஆகியிருந்தது. இந்த கர்த்தார்சிங்கைத்தான் பகத்சிங் தனது நாயகனாக வரித்துக் கொண்டான். இதன் பிறகு லாகூரில் பகத்சிங் நவஜவான் பாரத சபையை ஏற்படுத்துகிறான். இந்த இயக்கமானது லாகூரை விட்டு இந்தியா முழுவதும் கிளை பரப்ப வேண்டும் என கருதி உத்தரபிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான் என அங்குள்ள தீவிரவாதக் குழுக்களோடு பேச்சு நடத்துகிறான். முடிவில் 1928ல் நாடு முழுவதுமிருந்த தீவிரவாதக் குழுக்களிலிருந்து பத்து பேர் டெல்லி பெரோஸ்லா கோட்லா மைதானத்தில் ஒன்றுகூடி இந்துஸ்தான் சோசலிஸ்ட் ரிபப்ளிக்கன் ஆர்மியை உருவாக்கினார்கள். இதனை மக்கள் இயக்கமாக மாற்ற விவசாயிகளையும், தொழிலாளர்களையும் ஒன்றுதிரட்டுவது என்று முடிவுக்கு வருகிறார்கள்.

அமைப்புக்கு சந்திரசேகர ஆசாத் தான் மூளையாக செயல்படுகிறான். துப்பாக்கி, பிஸ்டல், ரிவால்வர் வாங்க பணத்துக்கு எங்கே போவது என்ற சவாலை அவர்கள் எதிர்கொள்கிறார்கள். வெள்ளைக்காரர்களால் பலன்பெறும் எந்த வியாபாரியும் நன்கொடை தர முன்வர மாட்டான் என்பது தெரிந்தது தான். மக்கள் பணத்தை கொள்ளையடிப்பது இயக்கத்தின் கொள்கைக்கு விரோதமானது எனவே அரசாங்க பணத்தை கொள்ளையடிக்கலாம் என்று முடிவு செய்தனர். அவர்கள் திட்டப்படி லக்னோவிலிருந்து சகரன்பூர் வரை செல்லும் பயணிகள் ரயிலில் ஒருவாரம் முழுவதும் ரயில்வேயின் மூலம் வசூலான பணம் டிரங்க் பெட்டியில் எடுத்து வரப்படும் அப்பணத்தை கொள்ளையடிக்க வேண்டும். இம்மியளவு கூட பிசகாமல் அந்த ஆப்ரேஷனை நடத்தி முடித்தார்கள். 1925ல் கொள்ளையில் ஈடுபட்டவர்கள் மீது ககோரி ரயில் கொள்ளை வழக்கு பதியப்பட்டது. சந்திரசேகர ஆசாத் தவிர அந்த கொள்ளையில் ஈடுபட்ட அனைவரும் கைது செய்யப்பட்டனர். நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டனர்.

இயக்கம் தனது பணிகளை முன்னெடுக்க தடைக்கல்லாக பணமே இருந்தது. மீண்டும் ஒரு திட்டம் உதிக்கவே லாகூர் பஞ்சாப் நேஷனல் வங்கியில் கொள்ளையடிப்பது என்று முடிவானது. திட்டம் பாதிக்கு மேல் நிறைவேறிவிட்டது ஆனால் எதிர்பாராத நேரத்தில் வாடகைக்கு அமர்த்திய கார் பழுதாகிவிட்டது எனவே அத்திட்டம் கைவிடப்பட்டது. 1928ல் இந்தியர்களுக்கு என்னென்ன உரிமைகள் தரலாம் என ஆய்வு செய்ய வந்த சைமன் கமிஷனில் ஒரு இந்தியர் கூட உறுப்பினராக நியமிக்கப்படவில்லை. சைமன் கமிஷனுக்கு எதிர்ப்பு வலுத்த நிலையில் டில்லி வருகை தரவிருந்த உறுப்பினர்களை அங்கேயே தீர்த்துக்கட்டுவது என்று இயக்கத்தினர் முடிவு செய்தனர். ஆனால் அங்கு நடந்த பாதுகாப்பு கெடுபிடிகளால் அவர்களின் நிழலைக்கூட நெருங்க முடியவில்லை அத்திட்டம் தோல்வியில் முடிவடைந்தது. இது இயக்கத்தினரை யோசிக்க வைத்தது. சைமன் கமிஷன் 1930 அக்டோபர் 30ஆம் தேதி லாகூர் வந்தபோது லாலாலஜபதிராய் தலைமையில் கறுப்புக்கொடியுடன் எதிர்ப்பு காட்ட திரண்டிருந்தனர். அங்கு நடந்த தடியடியில் லஜபதிராய் படு காயமடைந்து இருவாரங்களுக்கு பின் மரணமடைந்தார். இது இந்திய தேசத்தை கண்ணீர்விட வைத்தது.

தேசபந்து சி.ஆர். தாஸின் மனைவியான வசந்திதேவி இந்திய இளைஞர்கள் ஆண்மையற்றவர்களா பஞ்சாப் சிங்கத்தை தடியால் அடித்து உயிர் குடித்தானே அவனை என்ன செய்யப் போகின்றீர்கள். எதிர்க்கப் போகின்றீர்களா இல்லை சுயமரியாதையையும், சுயகௌரவத்தையும் இழக்கப் போகின்றீர்களா நீங்களே முடிவுகட்டுங்கள் என்றார். கொதித்தெழுந்த இயக்கத்தினர் தடியடிக்கு காரணமான சூப்பிரடெண்ட் ஆஃப் போலீஸ் சாண்டர்ஸை சுட்டுக் கொன்றனர். இந்த ஆப்ரேஷனில் ஈடுபட்டவர்கள் நால்வர் பகத்சிங், சுகதேவ், ராஜகுரு, சந்திரசேகரஆசாத் ஆகியோர். பகத்சிங்கும் அவனது கூட்டாளிகளும் தப்ப முடியாதபடி லாகூர் முழுவதும் காவல்துறை உஷார்படுத்தப்பட்டது. பகத்சிங் மாறுவேடத்தில் பகவதிசரண்வோரா என்கிற

சமூகப்போராளியின் மனைவியை தன் துணைவியாகவும் மகளை தன் மகளாகவும் நடிக்க வைத்து லாகூர் ரயில் நிலையத்தில் கல்கத்தா செல்ல முதல்வகுப்பு டிக்கெட் வாங்கினான். கல்கத்தாவுக்கு தப்பினான். ராஜகுரு வேலைக்காரனைப் போல் வேடமிட்டு லாகூரிலிருந்து தப்பினான். கல்கத்தாவில் அப்போது காங்கிரஸ் மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தது. தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்த பகத்சிங் அம்மாநாட்டில் வெடிகுண்டு தயாரிப்பதில் நிபுணரான யதீந்திரநாத்தாஸை சந்தித்தான்.

ஆக்ராவில் பகத்சிங்கின் சகாவான பகவத்சரண்வோராவின் இல்லத்தில் வெடிகுண்டு தயாரித்தும் அதை பரிசோதனை செய்தும் பார்த்தார்கள். ஜெயதேவ் கபூர் என்ற போராளியின் மூலம் காங்கிரஸ் உறுப்பினரிடமிருந்து காலரியில் அமர மூன்று பாஸ் வாங்கினார்கள். 1929 ஏப்ரல் 8ஆம் தேதியன்ற பகத்சிங்கும், வி.கே.தத்தும் சேர்ந்து மத்திய சட்டமன்றத்தில் வெடிகுண்டு வீசினார்கள். அவர்கள் இருவரும் தப்பிக்க முயலவில்லை வரும்போதே ஒரு திட்டத்துடன் தான் வந்தார்கள். கைதாவது நீதிமன்றத்தில் நீதிபதி முன்பு வாதிட்டு அதை பத்திரிகை செய்தியாக்கி மக்களிடம் எழுச்சியை உருவாக்குவது. அவர்கள் வாய் புரட்சி ஓங்குக, ஏகாதிபத்தியம் ஒழிக, தொழிலாளர்கள் வர்க்கம் வாழ்க என கோஷமிட்டுக் கொண்டே இருந்தது. கையில் கொண்டுவந்திருந்த துண்டுப் பிரசுரங்களை அவையோர் முன் வீசியெறிந்தனர். அதில் 'செவிடர்களைக் கேட்கச் செய்ய வேண்டுமானால் பலத்த சத்தம் அவசியமாகிறது' என்று எழுதி இருந்தது. நீதிமன்றத்தின் முன்பு நிறுத்தப்பட்ட பகத்சிங் தனது தரப்பு வாதத்தை முன்வைத்தான்.

தாயும், தாய்மண்ணும் எங்களுக்கு ஒன்றுதான் எப்படி அந்நியர் ஆள்வதை மறைந்திருந்து வேடிக்கை பார்ப்போம். யாருக்கு யார் அடிமை இங்கே. வெள்ளை நிறத்தவர்களெல்லாம் பரலோகவாசிகள் என இயேசு வந்து சொன்னாரா. புரட்சியை ஏறெடுப்பவர்களெல்லாம் பைத்தியங்கள் என்று எந்த புனிதநூலாவது சொல்கிறதா. பஞ்சம் பிழைக்க வந்த நீங்கள் எங்களை ஆள்வீர்களா? ஏகாதிபத்திய வெறி பிடித்த விக்டோரியா மகாராணி இந்திய இளைஞர்களையெல்லாம் பேடிகள் எனவா நினைத்தார்கள். நான் ராஜநாகம் உங்கள் மகுடிக்கு மயங்க மாட்டேன். வார்த்தைகளில் விஷத்தை கக்குபவன் நான். உங்களிடம் இந்த நாட்டை ஆள்வதற்குள்ள அதிகாரத்தை யார் கொடுத்தது. இந்தியா என்ன பக்கிங்காம் அரண்மனையா நீங்கள் ஓடிப்பிடித்து விளையாடுவதற்கு. விக்டோரியா இறுதித் தூதரா இல்லை பிரபஞ்சத்திற்கே அதிபதியா? வேதத்தை படிப்பவர்கள் யாராவது சாத்தான் வேலை பார்ப்பார்களா? நீங்கள் கடவுளின் பிரதிநிதி என்று சொல்லிக் கொண்டு சாத்தானுக்கு தான் சேவகம் செய்கின்றீர்கள். எங்கே படித்தீர்கள் யார் பாடம் எடுத்தது அடுத்தவன் சுதந்திரத்தை பறிக்க வேண்டும் என்று. உங்கள் கொல்லைப்புற ஆட்டு மந்தையாய் எங்களை நீங்கள் நினைக்கும் போது உங்களை எங்கள் நாட்டைவிட்டே விரட்டியடிக்க நாங்கள் ஏன் போராட மாட்டோம் என்று நீண்டது பகத்சிங்கின் வாதம்.

பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் மூன்று பேருக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டது. பகத்சிங் அதற்கெல்லாம் அஞ்சவில்லை. தூக்குமேடைக்கு செல்லவிருந்த பகத்சிங்கிடம் தலைமை வார்டன் சர்தார்சிங் கடைசி நேரத்திலாவது இறைவனை நோக்கி பிரார்த்தனை செய்யக் கூடாதா எனக் கேட்டான். அதற்கு பகத்சிங் என் தாய் நாட்டுக்கு பொன் விலங்கினை பூட்டியவனையா நீங்கள் கடவுள் என்கிறீர்கள். எங்களை அடிமை செய்ய வெள்ளைக்காரனை அனுப்பியவனுக்கு நாங்கள் சாமரம் வீச வேண்டுமா? பசி, பட்டினியால் மக்கள் கொத்து கொத்தாக மடிந்த போது உங்கள் கடவுள் என்ன உறங்கிக் கொண்டிருந்தாரா? படைத்தவன் தன் படைப்பின் மீது பாரபட்சம் காட்டுவானா?

இவன் அழகானவன் இவன் அவலட்சணமானவன் என்று. விதியே என்று சும்மா இருந்தோமானால் எந்நாளும் விதைகூட மண்ணைப் பிளந்து முளைவிட முடியாது. எதிர்ப்பிலேயே வாழ்ந்தால் தான் அது மனிதகுலம் இல்லையேல் சவக்கிடங்குதான். கண்பார்வையற்றவர்களும், உடல் ஊனமானவர்களும், புத்திபேதலித்தவர்களும் வாழும் இந்த பாழும் சிறையைத்தான் உங்கள் கடவுள் நிர்வாகம் செய்கிறானா? உங்கள் கடவுள் என்ற பதம் அதிகாரத்தை முன்நிறுத்துபவையாகத்தான் இருக்கின்றதே தவிர கருணையை, இரக்கத்தை முன்நிறுத்தவில்லை.

எப்படி நீங்கள் உருவாக்கிய கடவுள் உங்களை விட அதிகாரம் மிக்கவனாக இருக்கிறான். இது உங்களுக்கே வேடிக்கையாக இல்லை. நீங்கள் பகுத்தறிய முற்பட்டீர்களானால் கடவுளின் மகுடம் இங்கு காணாமல் போய்விடும். தண்டிப்பானானால் அவன் கடவுளல்ல. தண்டிக்கும் யாரும் கடவுளுமல்ல. பகத்சிங்கை தூக்கிலிட சிறைக்காவலர்கள் அவனை அழைத்துச் செல்ல முற்பட்டபோது சிறை கம்பிகளுக்கு உள்ளேயிருந்து பகத்சிங் ஒரு புரட்சியாளன் ஒரு புரட்சியாளனிடம் பேசிக் கொண்டிருக்கிறேன் கொஞ்சம் பொறுங்கள் என்றான். அவன் கைகளில் லெனினின் அரசும் புரட்சியும் என்ற புத்தகம் இருந்தது.

–



ப.மதியழகன்
*115,வள்ளலார் சாலை,*
*ஆர்.பி.சிவம் நகர்,*
*மன்னார்குடி - 614001.*
*திருவாரூர் மாவட்டம்.*
*கைப்பேசி: 9597332952*
*பகிரி: 9384251845*

## திறவுகோல் கொண்டு

திறக்கிறேன் என்
கவிதைக் கதவை.

மிகப் பெரிய
அரண்மனையே ஆனாலும்
ஒரு கம்பி போதும்
திறக்க.

யாரும் நுழைய முடியாத
மாளிகைக்குள் நுழைகிறது
திறவுகோல் எனும்
கம்பி.

காவலுக்குக் கெட்டிக்காரன் தான்
திறவுகோல் இல்லையெனில்
உடைபடுவான்.

இரட்டைப் பிறவிகள்
பூட்டும் திறவுகோலும்.

தேடும் போது தான்
திறவுகோலின் மகத்துவம்
புரியும்.

சிறு கம்பி தான்
காணாமல் போனால்
எவ்வளவு சண்டை.



–
ஆனந்தன்,
திருப்பூர்.

## பரபரக்கும்

சாலையின் நடுவே
சத்தமாகக்
கத்திக் கொண்டே
வேகமாகப் பயணிக்கும்
அந்த வண்டியில்
ஒன்றை உணர்த்தியபடி
மௌனத்தில் ஆழ்கிறது
இறுதி மூச்சை விட்டபடியே
ஒருயிர்!
************************

ஒருமுறை
அழச் செய்து
இரசித்த
இந்த உலகில் தான்...

ஒவ்வொரு முறையும்
அழச் செய்து
இரசிக்க
காத்துக் கொண்டிருக்கின்றனர்
பல மனிதர்கள்!

சிரி மனிதா!
அந்த வெளிச்சம்
உன் இருளை
அகற்ற மட்டுமல்ல...
சில விசப் பூச்சிகளை
விரட்டவும் தான்!



–
சா. கா. பாரதி ராஜா,
செங்கல்பட்டு.
9944315732

# துளிப்பாக்கள்

பூக்கடை
சுமந்து செல்கிறது
இறுதி ஊர்வலம்

நடுங்குகிறது
ஜன்னலோரம்
காலைநேரப் பனியொன்று

முத்தமிடும் காற்று
மூங்கிலில் தஞ்சம்
அடடே! புல்லாங்குழல் இசை

இலையின் விளிம்பில்
நடனமாடுகிறது
சிட்டுக்குருவி

முத்தமிடும்காற்று
பிரசவிக்கும் மலர்கள்
வீசும் மணங்கள்

வேருக்குள் ஒளிந்த நீர்
குடித்துவிட்டு கிளம்புகிறது
துளிர்க்கும் செடிகளாய்...

மஞ்சள் பூவும்
சாயம் பூசியதோ
மலரில் அமரும் குருவி

இரு பூக்கள்
பேசிக்கொண்டன
முத்தக் கனவில்...

பூக்கள் உரச உரச
வெட்டவெளியில்

அரங்கேறும் ஆபாசம்

அலையில்சிக்கியதூண்டில்
தவிப்பில் மீனவர்
கொண்டாட்டத்தில் மீன்கள்.

பறவைகள் வந்ததும்
கிளைகளும் குதிக்கின்றன
கூவும் குயிலோடு

குப்பைத்தொட்டி
பிரசவிக்கிறது
அனாதைகுழந்தை

புத்தரின் கால்களை
இறுகப்பற்றினேன்
ஆசையை கருவறுக்க...

தரிசனம் கிடைத்தது
கோவில் வாசலில்
யாசகனின் புன்னகை

நிரம்பிய குளம்
தாகம் தீர்க்கும் குருவி
தற்கொலையில் மழைத்துளி

பறவையின்கூடு
இடம்பெயர்கிறது
வெட்டப்படும் மரம்

–

ஞா.முனிராஜ்,
அருப்புக்கோட்டை.



# இழப்பின் வலி....!?

இழப்பின் வலி
மிகக் கொடூரம்...!
அதுவும் குடும்பத்தில்
இழப்பு மகா கொடூரம்...!
எங்கும் நடக்கிறது
மரணம்....!
அது எங்கோ
நிகழும் போது..
ஏற்படும் வலியை விட..!
உறவில் ஏற்படும் இழப்பு..
ஆறா இரணம்.....!?
மகிழ்ச்சியில் திளைத்திடும்
மனதை..
கூரிய வாளால்
கீறுதல் போன்றது..!?
நேசிக்கும் நம் உறவினை
இழந்திடும் சூழ்நிலை....!
வானவில் நழுவிய ...
நிறமதைப்போல....!?
எல்லா இழப்புகளுக்கும்...
ஆறுதல் சொல்கிறோம் ..!
அவர்கள் ஆறுதல்
அடைவார்கள் ...
என்ற நம்பிக்கையில்....!
நம் உறவின் இழப்பிற்கும்...
ஆறுதல் சொல்கின்றனர்..!
ஆனாலும் மனது..
ஆறவேயில்லை....!?

–

முனைவர். சா.சம்பத்

## 1.
## கதிர் குத்தி

பிறந்தவையா
இருள் கிழித்து
இதழ் அவிழ்ந்து
மலர்ந்தவையா
மகரந்தத்தை
மணமாகத் தெளித்து
வீழ்த்தும்
வண்டின் திணறலில்
பெருஞ் சுனை வழிந்தோட
மதுவை உண்ண உண்ண
பிறந்தவையா
மகரந்த தேடலில்
பறந்து வீழ்ந்து
வந்தவையா
மலர்ந்தது பூவின் கனவு
உதிர்ந்தது வாழ்வின் உணர்வு
தவழ்ந்தது கரு ஒன்று
பிறக்கப்போவது
எது என்று
சிறகொன்று விரிந்து
படபடக்கிறது
கர்ப்ப வெளியில்
ஆனந்த இசை
ஆழ் நடனத்தின் வழியற்ற மௌனம்
இருள் கிழிக்கும் பிரபஞ்சம்.

2.
குளத்தில்
ஓயாது அலைகள்
திரி கசக்கி
அனல் பிறந்தும்
சாயாது சுடர் அலைகள்
விட்டில் விளக்கில்
தேடுவது என்ன?
மரணித்து கதவு காகிதம்
வழியே விடுதலை
தேனீ பூக்களில்
தேடுவது என்ன?
மதுவில் மயங்கி பூவுக்குள் கைதாகி
இதழ்களின் விடுதலை
தட்டாமல் திறக்கும்
வானம்
சுவர் இல்லாமல்
இருக்கும் வீடு
எங்கும் வியாபித்திருக்கும்
தெய்வீகம்
ஓயாது அலைகள்
ஓயாது அலைகள்
பிரபஞ்சத்தில்
ஓயாது அலைகள்.

3.
இரவின் வழிப் பாதையெங்கும்
ஏங்கும் நட்சத்திரங்கள்
நிறம் மாறாத ஒளி கொண்டு
தண்ணீரில் முகம் பார்த்து
ஓர் எதிர்பார்ப்பு
வெள்ளி முளைத்து வான் வழியே
அண்டரண்ட பட்சியின் மேல்
உக்கிரமாய் இறகு வீச
பிரபஞ்ச உலா
சொல்லி விழுங்கும் கூரையினுள்
கூடு கட்ட வந்தது ஏன்
நட்சத்திர வெளியெங்கும்
ஒளித் திரள் சுற்றிவர
அகாதத்தில் பூத்து ரசித்தது
தாமரையொன்று.

4.
பேரண்ட பட்சிகளாய்
கோள்களும் சுற்றிவர

உயிர் வித்து திரித்து
நூல் அசைவில் தோட்டமிட
வானத்துச் சாட்சிகளெல்லாம்
விரிந்து விரிந்து
கடுவெளியாய் காட்சி தந்து
தந்தம் முறித்து
பாரத கர்ப்பத்தில் சூரியனும்
அமர்ந்துவிட
நிலா துளிர்த்து
அரவாணி அவதரித்து
பதினெட்டு நாள் குருதி சுரந்து
மூவுலகம் பூச்சொரிந்து
தர்மத்தின் பாதையெங்கும்
ஒளி வீச
நட்சத்திரங்களின் பூமழை சுரந்து
பெருங்கடலாகி
தனிக்கிறாள் மாதொருத்தி
கடல் தாண்டி
தீயிட்டு
பத்து தலைகள் அறுத்தெறிந்து
பாவம் போக்க மணல் பூசையில்
ஆதியும் அந்தமும்
காணாத உடலை அடக்கி
பெருங்கருணை போற்றி
பெருங்கருணை போற்றி
விரிந்து செல்லும் எல்லையில்லா
பேரண்ட காவியமே
உயிர் துறந்த உடல்களெல்லாம்
உன் மீது மோதி
மோன இசையெழுப்பி
உயிரற்ற உடல் கயிற்றைத் திரித்து
விளையாடி
அண்ட விளையாட்டின் அடி ஆழம்
நானறிவேன்
உயிர் வித்து திரித்து
உடல் தேடி வீசி
கருக் கோளத்தில் அழகான
இசையொன்று
துடிக்கிறது பூமியெங்கும்.

5.
குறுக்கும் நெடுக்குமாக
சுற்றித்திரியும் பூனை
ஒரு கணம் என்னைப் பார்த்தது
எதோ உறவு முறை சொல்லி
அழைப்பது போல்
கருணை இருந்தது
அதன் பார்வையில்
இப்பொழுதெல்லாம்
ஒரு நாளும் தவற விடுவதில்லை
அந்தப் பார்வையை
அந்தப் பூனையை.

6.
மீண்டும் கூடு திரும்பிய
பறவை
கிளை அமர்ந்து
கூட்டை தேடும்பொழுது
தொலைந்து போனது
எடுத்துவந்த உணவை
குஞ்சுகளுக்கு
கொடுத்து உறங்கிப்போனது
கிளையின் தாலாட்டில்
கரைந்துபோனது
உலகெங்கும் படுத்துறங்கும்
பறவைகளின்
இறகில் ஒரு சிறு துளி காற்று
அசந்துறங்கும் இந்நேரம்.

7.
அந்தரத்தில் பூமிப் பூ
நீல நிற பெரும் பரப்பு
பூமி பூவெங்கும்
பல நிறங்கள்

பச்சை நிற வனப்பெங்கும்
வான் நோக்கிச் சமைந்து எழுந்து
பல வண்ண பூச்சொரிந்து
தேன் சிந்தி
போதையூட்டி
வாசம் கொண்டு கவர்ந்திழுக்க
தேனீக்களின் முத்த வாசம்
பாலை மண் பறவையின்
இறகு நிழலில்
இளைப்பாற
பூமியெங்கும் தகிக்கிறது
இருள் அனல்
தேனீக்களின் ரீங்காரம்
எதுவரை
பூ பூத்து
இதழ் விரிக்கும் வரை
உதிரும் நித்திரை
நுகர்ந்தது உறவுகள்
பூக்களின் சிரமம் அறியாத
தேனீக்கள்
பாலை மணலின் வெப்பத்தை
உணர்ந்திருக்குமா
அந்தரத்தில் பூமிப் பூவொன்று
யார் கையில்
யார் கையில்.

8.
இரவின் மையப்புள்ளியை
உடைத்து இருளை துடைக்க
துடிக்கிறது அனலி பூ
ஆழ்ந்த உறக்கத்தில்
நாதியற்ற இதயங்களின்
மௌன துடிப்புகளில்
வெடித்து எழுகிறது
கீறல்களாய் ஓர் தொடர்ச்சி
பெருவெடிப்பின் மையத்தில்
திளைக்கிறது அணு திசையின்
அதிர்வுகள்
வலிகளைத் துடைக்க இயலாத
பெருங்கீற்று ஊற்றுகளாய்
வற்றாது சுரக்கிறது நட்சத்திரங்கள்
இருளை போக்க இயலாத
ரேகைகளின் மிச்சங்களாய்
செல்கிறது நூற்றாண்டு சரித்திரம்
தின சரித்திரத்தில்
எரிந்து அடங்கிப்போகிறது
மண் மகரந்தம் தூண்டும்
நாதியற்ற பிணங்கள்
கட்டி முடிக்கும் சமூகத்தில்
தினம் சிந்தி உறைந்து
உடைந்து போகிறது
நாதியற்ற குருதி வழித் தடங்கள்.

–

ப.தனஞ்ஜெயன்,
danadjeane1979@gmail.com




ஓவியம்:
சாதனா பரந்தாமன்,
விருதை

## 1. கூகுளில் தேடு...

கூகுளில் தேடினால்
எல்லாம் கிடைக்குமென்றாயே - அம்மா...
தொலைந்த - என் பொம்மை கிடைக்குமா?

## 2. மனம் போன போக்கிலே...

வீதியில் இறங்கி
வேடிக்கை பார்த்தேன்...
ஒருபுறம் கல்யாண மேளம்...
மறுபுறம் கடைசி மேளம்...
எங்கு நான் செல்ல.?
மனம் போன போக்கிலே
நடையை கட்டி
கடைசி மேள
வீட்டை அடைந்தேன் - ஆம்.
கல்யாண மேளத்தை விட
கடைசி மேளச் சத்தம்
இனி காணக் கிடைக்காதன்றோ?

–
இலக்கியா இளவரசன்

## நாற்காலி

இரண்டு கால்
உயர்திணையை
ஆட்டுவிக்கும்
நான்கு கால்
அஃறிணை

--
கோ.கார்த்திகேயன்



**சி. தன்யாஸ்ரீ**
**6ஆம் வகுப்பு, அ பிரிவு,**
**சாக்ரெட் கார்ட் மேல்நிலைப் பள்ளி,**
**தஞ்சாவூர்.**

# கடிதங்கள்

நலம் நலமறிய
ஆவலோடு
விசாரித்த இதயங்கள்
காணாமல் போயின!

'சார் தபால்' என
மிதிவண்டியிலிருந்து
எழுந்த கம்பீரக்குரல்
நலிவுற்றன!

மடல் எழுதி
மறுமொழிக்கு
காத்திருந்த காலங்கள்
கரைசேர்ந்தன!

அஞ்சல் முகவரிக்கு
அஞ்சலி செலுத்திவிட்டு
மின்னஞ்சல் முகவரிகள்
கைசேர்ந்தன!

தொலைதூர உறவுகளை
இணைத்து வைத்த கடிதங்கள்
தொழில்நுட்பத்தால்
தொலைத்துவிட்டது
உறவுகளை!

தேடிக்கொண்டே இருக்கின்றன
கடிதங்களை
முகவரிகள் தொலைத்த
தபால் பெட்டிகள்!

குவிந்துவிடும் செய்திகளால்
கைபேசிகள்-இன்று
நிரம்பிவிடுகின்றன
குப்பைத்தொட்டிகளாய்!

அன்பைக்கொட்டி
எழுதிய கடிதங்கள்-அன்று
சேகரிக்கப்பட்டன
இதயக்கிடங்குகளில்!

கதவுகளைத் தட்டிய
கடிதங்கள்
இதயங்களைத் தட்டி
எழுப்பின!

காத்திருக்கிறேன் நானும்
என் வீட்டுக் கதவைத் தட்டுமா?
கவிதைகள் தாங்கிய கடிதங்கள்!

--
பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்.
6380704001



# ஆரம்பம்

அவசர அவசரமாக
விழித்தவனுக்கு
வாழ்த்துகள் கூறி
வாயில் திணிக்கப்படுகிறது
வகை வகையான
இனிப்புகள்...!

என்னவென்று
அறியும் முன்னரே
அடுக்கி வைக்கப்பட்டுள்ளது
வெளிப்பணியும்
குடும்ப பணிகளும்...

அளவில்லாத
புன்னகையினை
வாரி வழங்கிய
புத்தாண்டிற்கு

உணவில்லாமல்
உடையில்லாமல்
உறைவிடமில்லாமல்
தவிப்பவர் பக்கத்தில்
வெற்று
பொதுவானங்களைக் கூட
நெருப்பால்
கங்கு மின்னி சிவக்கும்
நிலை கொடுக்காதது ஏனோ....!

புத்தாண்டிற்கும்
புரிந்துவிட்டது போலும்
நடைமுறை நியதிகள்...

–

கவிஞர் கார்கவி
(Er.prof. சே.கார்த்திகேயன், ME.,)
சன்னமங்கலம்,
நாகப்பட்டினம் (மா) - 611002

---

# பாப்பா

கோபத்தின் உச்சியில் நான் இருக்க...
அதை சரி செய்யும் கட்சியில் அவள் இருக்க...
அவள் அழைத்த மாமா என்ற ஒற்றை வார்த்தையில் சிதைகிறது
என் சினமும்.....
என் சிந்தனையும்......

என் சூழ்நிலைகளையும்,
என் கவலைகளையும்,
என் உணர்வுகளையும்,
என் செயல்களையும்
உணர்ந்த ஒரே உள்ளம்
என்
பாப்பா...

–

கா.புஷ்கார்,
தஞ்சை.



# இலங்கையில் சிறுகதை எழுத்தாளர்களின் வரிசையில் இணைகிறார் இளம் எழுத்தாளரும் கலைஞருமான பொன். பத்மநாதன்.

இந்திய வம்சாவழியான நாங்கள் கடந்த நூறு வருடங்களுக்கு முன் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த வேளார் பரம்பரையினர்கள்.

இவர் "பூக்கள் பூக்கா பூந்தோட்டம்" எனும் சிறுகதை நூலை இம்மாத இறுதியில் வெளியிடவுள்ளார்.

உங்களை பற்றி கூறமுடியுமா?

மாத்தளையில் பிறந்த நான் இந்து கல்லூரியில் உயர் தரத்தில் கல்வி கற்கும்போது விமானப் படையில் சேர்வதற்காக விண்ணப்பித்தேன் நான் தேர்வில் தெரிவு செய்யப்பட்டாலும் எனது பெற்றோரின் விருப்பமின்மையால் அது கைகூடாமல் போய்விட்டது.

அதன் பின் உயர் கல்வியைத் தொடர்வதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை அதன்பிறகு கொழும்பில் செட்டியார் தெருவில் தொழிலில் நிமிர்த்தம் வாழ்க்கை ஆரம்பமாகியது.

உங்களது சமூக சேவை பற்றி?

எனது பாடசாலை நண்பரான தியாகராஜா என்பவரால் தமிழ் இளைஞர் கலாசார கூட்டமைப்பில் இணைந்து கொண்டேன். அதன் கிளையாக ஜயசக்தி இளைஞர் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. பெரியவர்கள் தாய் மன்றத்திலும் இளையவர்கள் கிளை மன்றத்திலும் செயல்பட்டோம். இந்த மன்றத்தின் மூலமாக இலவச திருமணம் செய்து வைத்தல், பாடசாலை மாணவ மாணவியர்களுக்கு இலவச அப்பியாச புத்தகம். பாடசாலைக்கு செல்வதற்கு புத்தக பைகள் வழங்கல், சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் முகமாக மாணவர்களுக்கு வங்கியில் சேமிப்பு பணவைப்பு செய்து ஆரம்பித்தல், ஆங்கில தட்டச்சு பயிற்சி வழங்கல் என பல்வேறு சமூக சேவைகள் செயல்படுத்தினோம் இவ்வாறு இம் மன்றத்தின் மூலம் மூன்று வருடங்களாக சிறப்பாக சேவையாற்றியமைக்காக முன்னாள் அமைச்சர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானால் இளம் வயதிலேயே கௌரவிக்கப்பட்டேன். முன்னாள் அமைச்சர் பீ.பீ. தேவராஜா அவர்களால் சமாதான நீதவானாக சிபாரசு செய்யப்பட்டு சமாதான நீதவானாக நியமிக்கப்பட்டேன்.

*கலைதுறை பற்றி?*

*இவர் கலைத்துறையில் ஈடுபட்டது பற்றி இங்கு மனம் திறந்து கூறுகிறார்....!*

*எமது தாய் மன்றத்தில் கலைஞர்களான ராஜசேகரன், ஹெலன்குமாரி, கந்தையா, கே. செல்வராஜா, முத்துசாமி முன்னால் மாகாண சபை உறுப்பினர் கே.டி குருசாமி ஆகியோர் இருந்தார்கள். அந்த காலத்தில் கொழும்பில் நாடகங்கள் போட்டி போட்டு மேடையேற்றப்பட்டன. 1990ஆம் ஆண்டு அரசாங்கத்தால் தமிழ் நாடகபோட்டி நடத்தப்பட்டது. பல மன்றங்கள் நாடகங்களை மேடையேற்றி போட்டியில் கலந்து கொள்ள முயற்சித்தன. அவ்வேளையில் வெள்ளி நிலா கலாலயம் "கவ்வாத்து கத்தி" என்னும் நாடகத்தை மேடையேற்றியது. அதில் நானும் நடித்தேன். அந்நாடகம் இலங்கை தேசிய நாடக விழாவில் முதலாவது பரிசை வென்றது.அதில் கேடயமும் சான்றிதழும் கிடைத்தது பாடசாலை நாட்களில் பல நாடகங்களில் நடித்தியிருந்தாலும் கொழும்பில் நான் நடித்த முதல் நாடகம் இதுவாகும்.*

*இதுவரை எத்தனை நாடகங்களில் நடித்துள்ளீர்கள்?*

*முதலாவது நாடகம் கொழும்பில் "கவ்வாத்து கத்தி" ஆகும். அதன்பின் "தண்ணீர் தண்ணீர்", "டார்லிங் டார்லிங்", "ஒன்று எங்கள் ஜாதியே", "மது மதி" போன்ற நாடகங்களிலும் நடித்துள்ளேன். மறைந்த கலைஞர் கே. மோகன்குமாருடன் "விடிவே இல்லாத முடிவு" என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது. இந்நாடகம், 2002ஆம் ஆண்டு இலங்கை தமிழ் நாடக விழாவில் மூன்றாவது பரிசை வென்றது. அடுத்து "பாவக்கரை", "முரன்பாடுகளும் முற்று புள்ளிகளும்", "சிறகுகள் விரிகின்றன, "மூடதேசத்து முட்டாள் ராஜா" பதினாறு மேற்பட்ட நாடகங்களிலும் நடித்தேன்.*

*1998ஆம் ஆண்டு தொலைகாட்சியான இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தால் எம்.என். ராஜாவின் தயாரிப்பில் "மனிதர் நல்லவர்கள்" என்ற தொலைக்காட்சி . நாடகத்திலும், டாக்டராகவும் சிங்கள நாடகமான கம்பித்தவில், ரிது ஆகிய நாடகங்களிலும் நடித்தேன். இந்தியா ராஜ் டிவி யில் மகேஸ்வரியின் தயாரிப்பில் வேலைக்காரனிலும் இலங்கை, இந்தியா, கனடா கூட்டுத்தயாரிப்பில் "மிட் நைட் சில்டிரன்" என்ற ஆங்கில திரைப்படத்திலும் நடித்துள்ளேன்.*

*2018ம் ஆண்டு கே. செல்வராஜனின் "ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்" நாடகத்தில் நடித்தேன். 2019ம் ஆண்டு கே. செல்வராஜாவின் நெறியாள்கையில் "இதற்கு தானே ஆசைப்பட்டாய்" நாடகத்தை தயாரித்து மேடையேற்றியுள்ளேன் .*

புதிதாக கதை எழுதவேண்டும் என்று எப்படி எண்ணம் வந்தது?

என் மனதில் கடந்த பதினைந்து வருடங்களாக கதை புத்தகம் எழுதவேண்டும் என்ற எண்ணம் புதைந்தது கிடந்தது. நேரமின்மையால் எழுத முடியாமல் போனது. இப்போது நேரம் கிடைக்கும்போது ஒவ்வொரு கதையாக எழுத ஆரம்பித்தேன். ஆறு மாதமாக எழுதி வந்தேன். இதைப் புத்தகமாக வெளியிட்டால் என்ன என நினைத்து கே செல்வராஜாவிடம் கலந்தாலோசித்தேன். சில அறிவுரைகளை கூறினார். அவரே இப்புத்தகத்துக்கு "பூக்கள் பூக்காத பூந்தோட்டம்" என்றும் தலைப்பை கொடுத்து உற்சாகபடுத்தினர். புத்தகமாக வெளிவருவதற்கு இவரே காரணம் எனலாம்.
இலை மறை காயாக இருந்த என்னைக் கலைஞராக எழுத்தாளராக உலகுக்கு அறிமுகப்படுத்திய ஆர். ராஜசேகரன், கே. மோகன்குமார், கலைஞர், கலைச்செல்வன், கலைஞர் சந்திரசேகரன், மகேஸ்வரி, கே. செல்வராஜன் சமூக சேவையில் கே.டீ.குருசாமி ஆகியோருக்கு எனது மனமார்ந்த வணக்கங்கள்.

அரசியலில் எப்படி?

நீங்கள் அரசியலில் ஈடுபட்டது குறித்து என்ன கூற விரும்புகின்றீகள்.
அரசியலில் தலைவர் மனோ கணேசன் அவர்களின் சனநாயக மக்கள் முன்னணியின் முகத்துவார அமைப்பாளராக நியமிக்கப்பட்ட நான், அவரினால் எனக்கு ஒதுக்கிய பன்முகபடுத்தப்பட்ட நிதியில் பல வீதிகளுக்கு தார் போட்டு காபட் இட்டு, மின் விளக்குகளையும் பொருத்தி உள்ளேன்.

உங்களுக்கு விருதுகள், பட்டங்கள் ஏதும் கிடைத்துள்ளதா ?

சமூக தீபம், சமூக ஒளி, கலைமாமணி, சமூக சேவைக்காக இந்தியா ஸ்ரீ அண்ணாமலை குருகுலம் மூலம் அமுத களஞ்சியம் ஆகிய பட்டங்கள் கிடைத்துள்ளன.

தற்போது நீங்கள் வகிக்கும் பதவிகள் என்ன?

தமிழ் இளைஞர் கலாசார கூட்டமைப்பின் தலைவர், இலங்கை தமிழ் கலைஞர் சங்கத்தின் செயலாளர் , லயன்ஸ் கிளப் கோல்ட் சிட்டியின் செயற்பாட்டுத் தலைவர், மலையக கல்வி அபிவிருத்தி மன்றத்தின் ஆரம்பகால உறுப்பினராகவும் சமுக கலை இலக்கிய ஆன்மீகத் துறைகளில் ஆதி ஸ்ரீ ஐய்யப்பா சேஷ்ரத்தின் உப பொருளாளராக சேவையாற்றி வருவதோடு புதிய முயற்சிக்காக எழுத்தாளராகவும் ஈடுபட்டு மக்கள் சேவைக்காக என்னை அர்ப்பணித்துள்ளேன்.

முற்றும்.



# ஆளுமையால் சிகரம் தொடு

சிறந்த ஆளுமை சிகரம் தொடும்
தொடர்ந்து  எங்கும் பெருமை படும்..
எங்கும் ஆளுமை என்பது சிறப்பானால்
எந்தச் செயலின் முடிவும் சிறப்பாகும்..

ஆளுமை என்பது ஆணவம் கொண்டால்
பெற்ற புகழும்  கூட சரிந்து விழும்..
உலகில் ஆளுமை என்பது திறனாகும்
அதிலே அன்பு நிறைந்தால் அறனாகும்..

சிறந்த ஆளுமை என்பது மொழியாகும்
வெற்றி வாகை சூடியோரின் வழியாகும்..
ஆளுமைத் திறனை வளர்த்துக் கொள்வோம்
நம்மை அடையாளமாக ஆக்கிக் கொள்வோம்..

அகிலம் நம்மை அடையாளம் கொண்டால்
அழகாய் வாழ்வை திறனால்  வெல்வோம்..
பொறுப்புக்கள் தொடர்ந்து துணிந்து ஏற்போம்
அறிவால் அதனை சிறந்து முடிப்போம்..

ஆளுமை தன்மை வாழ்வில் இருந்தால்
ஆயிரம் தடைகள் சூழ்ந்தே இருக்கும்..
தடைகள் யாவும் தகர்ந்து போக
விடைகள் அனைத்தும் வாழ்வே கொடுக்கும்..

–

சா .நாகூர் பிச்சை,
திண்டுக்கல்.

# நீயும் முதலாளி தான்

பத்து வருடங்களுக்கு மேல் முறுக்கு
வியாபாரம் செய்யும்
வேலுவுக்கு இந்த கொரோனாவால்
வியாபாரத்தில் மேலும் மேலும் சரிவு
தான்.

என்னங்க வந்துட்டீங்களா?
இன்னைக்கு வியாபாரம்
பரவாயில்லையா?
என்றாள் மனைவி வான்மதி....
அதேன்கேக்குற தாயி
இவ்வளவு நாள் நல்லாத்தான்
போனது. ஆனால் இந்த
கொரோனாவால தான்
யாரும் வாங்க மாட்டேங்குறாங்க
செஞ்சப் பொருளை
என்ன பண்றதுன்னே
தெரியல தாயி
அதான் வந்துட்டேன்
என்றான் வேலு...
கவலைப்படாதீங்க
இந்தக் கொரோனா
இப்படியேவா இருக்கப்
போகுது. ஒருநாள்
எல்லாம் சரியாப் போயிடும்
என்றாள் வான்மதி...

மறுநாள் காலை
அப்பா...அப்பா...
எனக்குப் படம் வரையணும்
கலர் பென்சில் வாங்கிட்டு
வாங்கப்பா....என்றாள்
மூன்றாம் வகுப்புப் படிக்கும்
செண்பகா....

அப்பா எனக்குக் கணக்கு நோட்டு
தீர்ந்துப் போச்சுப்பா...
என தன் பங்கிற்குக்
கேட்டான் முகிலன்....
சரி சரி என தலையாட்டிப்
புன்னகைத்தவாறே
முறுக்குப் பையுடன்
வண்டியைக் கிளப்பினார் வேலன்...

இரவு 8. மணி
ஏங்க இவ்வளவு நேரம்
பிள்ளைகள் உங்களைப்
எதிர்பார்த்து எதிர்பார்த்து
ஏமாந்துப்போய்
தூங்கிட்டாங்க என்றாள்
வான்மதி....
வழக்கமா முறுக்குப்
போடுற கடையில
கொஞ்சம் கூட்டம்.
அதான் பணம் தர நேரமாயிட்டது
என்றான்
வேலு...
சரி..வாங்க
சாப்பிடுங்க..என்றாள்
வான்மதி.

மறுநாள் காலை...

காபி டம்ளருடன் வந்து
நின்றவளிடம்
என்ன நேரத்துலேயே
எழுந்துட்டியா தாயி
என்றான் வேலு...
ஆமாங்க..என்றவள்
தயங்கியபடியே...
நான் ஒண்ணு சொன்னா
கோவிச்சுக்க மாட்டீங்களே என்றாள்

வான்மதி...
சொல்லு தாயி என்றான்
வேலு...
நம்ம பிள்ளைகளும்
நாளுக்கு நாள் வளர்ந்துட்டே
வர்ராங்க.
உங்க ஒருத்தர் வருமானம் போதல.
நானும் படிச்சிருக்கேன்.
அதான் ஏதாவது வேலைக்குப்
போகட்டுமா என்றாள்
வான்மதி....
அம்மா...தாயி... உன்னைக்
கல்யாணம் பண்ணும்போதே
வேலைக்கெல்லாம்
அனுப்பக்கூடாதுன்னு
நினைச்சு தாம்மா
கல்யாணம் பண்ணினேன்.
இப்போ உன்னை வேலைக்கு
அனுப்பினா
உன் குடும்பம் மட்டுமல்ல
இந்த ஊரே என்னை
ஏசும்மா...என்றான்
வேலு....
அப்ப படிச்சு வேலைக்குப் போற
பெண்களையெல்லாம்
இந்த உலகம் மரியாதையா தானே
நடத்துது. படித்தது
வீண் போயிடக்கூடாது.
கணவரின் துன்பத்துல
பங்கு எடுத்துக்கறது
தப்பா..? என்றாள்
வான்மதி....
தப்புன்னு சொல்லலை தாயி
வீட்டில் பிள்ளைகளைக்
கவனிக்க முடியாம போயிடுமே
என்றான்
வேலு....

அதிலும் நீ இன்னொரு
முதலாளிக் கிட்ட
சம்பளம் வாங்கணுமா? என்று
கேட்டான் வேலு.....
புரியுதுங்க. உங்களுக்கு
விருப்பமில்லைன்னா
வேண்டாங்க என்றாள்
வான்மதி....

சரி நான் வியாபாரத்திற்கு
கிளம்புறேன் என்று
வண்டியை ஓட்டிச்
சென்றவனுக்கு
ஆழ்ந்த சிந்தனை
மனைவி கூறியது
சரியா? அவளை
வேலைக்கு அனுப்பலாமா?
என சிந்தித்துக்கொண்டே
சென்றவனைத் தடுத்து
நிறுத்தியது சாலையின்
குறுக்கேச் சென்ற
பசுமாடு ஒன்று.
கீச்சென பிரேக் போட்டு
வண்டியை நிறுத்தினான்.
சுதாரித்துக் கொண்டு
வியாபாரத்தை முடித்து விட்டு
மாலை வீடு திரும்பினான் வேலு.

ஏன் ஒரு மாதிரியா
இருக்கீங்க என்றாள்
வான்மதி....
ஒன்னுமில்லே வர்ர வழியில என்றான்
வேலு...
என்னாச்சுங்க என
பதறினாள் வான்மதி...
ரோட்டுல மாடு ஒன்று
குறுக்கே போயி...

நல்லவேளை ஏதும்
ஆகல என்றான் வேலு....
இனிமே பார்த்து கவனமா வண்டி
ஓட்டுங்க என்றாள்
வான்மதி...
ஆனா நல்ல யோசனை ஒன்னு
தோணுச்சுத் தாயி
என்றான் வேலு...
என்ன யோசனைங்க என்றாள்
வான்மதி...
நீ ஏன் சொந்தமா ஒரு
தொழில் செய்யக்கூடாது? என்றான்
வேலு...
நானா? தொழிலா?
என்னாச்சு உங்களுக்கு?
தொழில் தொடங்க
முதலீடு வேணுமே?
என்றாள் வான்மதி...
நான் வியாபாரத்துல
வர வருமானத்துல
கொஞ்ச கொஞ்சமா
பிள்ளைகளுக்காக
சேர்த்து வைச்சிருக்கேன்.
அந்த பணத்துல ஒரு
பசுமாடு வாங்கிருவோம்.
எப்படி என் யோசனை? என்றான்
வேலு.
யோசனை நல்லாத்தான்
இருக்கு. ஆனா மாடு
கட்ட இடம் இல்லையே
என்ன செய்வது என்றாள்
வான்மதி.
இந்தச்சுவரை ஒட்டியே
மாட்டுத் தொழுவம்
ஒன்னு போட்டுருவோம்.
எனக்கென்னமோ நீ
வேறு இடத்துல போய்
வேலை செய்றது
புடிக்கல தாயி.
இன்னைக்கு ஒரு பசு
வாங்குவோம். மீண்டும்
படிப்படியா உயர்ந்து
இரண்டு, மூன்று பசுக்களை
வாங்குவோம். நீ
படிச்சது வீண்போகாம
இருக்க நம்ம வீட்டு பிள்ளைகளுக்கு
பாடம் சொல்லிகொடுத்த
மாதிரியும்
இருக்கும். நம்ம வளர்க்கும் பசுமாட்டு
பிள்ளைகளையும்
பார்த்த மாதிரி இருக்கும்.
சொந்தத் தொழில் செய்து
பண்ணையைப் பெருக்குவோம்.
எதிர்காலத்தில்
அந்தப் பண்ணைக்கு
நீயும் ஒரு முதலாளியே
என்ன நான் சொல்றது?
என்றான் வேலு...

மறுநாள்
அதிகாலையில் வேலுவும்,
வான்மதியும்
மகிழ்ச்சியுடன்
மாட்டுச்சந்தைக்குப்
புறப்பட்டனர்.

–

மு. ஜெரோஷா,
எழுத்தாளர்.

# மகிழ்வித்து மகிழ்ந்த வானர குட்டி

ஒரு அழகான அடர்ந்த காடு இருந்தது, அந்த காட்டில் சிங்கம், யானை, முயல் போன்ற விலங்குகள், பறவைகள் என அனைத்தும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தது…



ஒரு நாள் இரவு நேரத்தில் பலத்த மழையுடன் கூடிய புயல் காற்று வீசியது.. (கஜா புயல் போன்ற வேகம்)


புயல் மழையில் சில விலங்குகள், பறவைகள் என அனைத்தும் தூக்கி வீசப்பட்டனர். பல மரங்கள் காற்றில் முறிந்தது. இடையூறுகளில் சிக்கி சில விலங்குகள் இறந்தது. பறவைகள் சில சிறகொடிந்து விழுந்து கிடந்தது. அழகிய காடு அலங்கோலமானது.

உயிர் பிழைத்த விலங்குகள் சில சிங்கராஜாவின் குகைக்கு முன் வந்தது… சிங்க ராஜாவிடன் விலங்குகள் அழுது புலம்பியது குட்டிகளை காணவில்லை, இறந்துவிட்டது என அழுதது…



சிங்க ராஜா காணாமல் போன குட்டிகளை முதலில் கண்டறிந்து மீட்க உத்தரவிட்டது. தேடி முடித்த பின் இதே இடத்தில் (சிங்க ராஜாவின் குகைக்கு முன்) ஒன்று சேரவும் சொன்னது.

முயல், யானை, மான் என ஒவ்வொரு விலங்கும் ஒவ்வொரு திசையில் தேட தொடங்கியது.



காற்றின் வேகத்தில் வெகு தூரத்தில் தூக்கி வீச பட்ட ஒரு குட்டி முயல் அழுது கொண்டே அங்கும் இங்கும் தாவிக்கொண்டு வந்தது. அதே வழியில் மான் குட்டியும் தன் இனத்தை காணாமல் கத்தி கூச்சல் போட்டது. இதை கண்ட

முயல் இருவரும் ஒன்றாக தேடலாம் என்றது.

(அழுதுகொண்டே ஒரு பக்கமாக நகர்ந்து செல்ல தொடங்கியது)

ஒரு குரங்கு குட்டி ஒன்று தன் தாயை காணாமல் செய்வதறியாது உடைத்த மரக்கிளைகளில் தாவிக் கொண்டிருந்தது.



அப்போது அந்த வழியாக அழுதுகொண்டே வந்த முயல், மான் குட்டிகளை கண்டு பெருமூச்சு விட்டது குரங்கு குட்டி...

(இவை இரண்டும் அழுது அழுது பசி மயக்கத்தில் தள்ளாடி நடப்பதை குரங்கு குட்டி கவனித்தது, தானும் இவர்களிடம் சென்று தேடுகிறேன் என்றால், இவை அழுகை நிறுத்த போவதில்லை என்று எண்ணியது)


இவை இரண்டும் நடந்து செல்லும் போது எதிரே வந்து நின்றது. நீங்கள் யார் என்று கேட்டது. அதற்கு குரங்கு நான் தான் உங்களை மீட்டுச்செல்ல வந்தவன். தொலைந்து போனவர்களை மீட்க சிலரை அனுப்பினார்கள் அதில் நானும் ஒருவன் என்றது. வாருங்கள் செல்லலாம் என்றது.


(முயல், மான் குட்டி இரண்டும் அழுகையை நிறுத்தியது.)

ஒன்றை ஒன்று பார்த்து கொண்டு ஒரு விதமான தயக்கத்துடன் சரி செல்லலாம் என்றது.

மூன்றும் ஒரு வழியாக செல்ல தொடங்கியது..


இவைகளின் பசியறிந்த குட்டி குரங்கு அங்கும் இங்கும் தாவிசென்று காய் கனிகளை பறித்து வந்து கொடுத்தது. பசியில் இருந்த இரண்டு குட்டிகளும் அதை வாங்கி உண்டது. பெருமகிழ்ச்சியுடன் அவை உண்பதை கண்டு மகிழ்ந்தது. அடர்ந்த காட்டிற்றுக்குள் சிறு வழிதடங்கள் இரண்டு தென்பட்டது. அந்த குரங்கு குட்டிக்கு எந்த வழியில் செல்வது என்று தெரியவில்லை சற்று குழப்பத்துடன் ஒரு வழியை தேர்ந்தெடுத்தது. மான் மற்றும் முயல் குட்டி இரண்டும் தன் தாயை பார்க்க போகும் மகிழ்ச்சியில் துள்ளி குதித்துக்கொண்டு குரங்கு குட்டியின் பின் தொடர்ந்து வந்தது.






செல்லும் வழியில் திடீரென ஒரு மலைப்பாம்பு முயல் குட்டியை சுற்றி வளைத்து விழுங்க வந்தது, அந்த சமயத்தில் குரங்கு குட்டி சட்டென்று முயல் குட்டியை இழுத்து பாம்பிடம் இருந்து மீட்டு மூன்றும் தப்பி ஓடியது.

ஓடி வந்த களைப்பில் மான் குட்டிக்கு தாகம் எடுத்தது, செல்லும் வழியில் ஒரு குட்டை இருந்தது. அந்த குட்டைக்கு சென்று மூன்றும் நீர் அருந்தியது... அப்போது நீருக்குள் இருந்த முதலை மான் குட்டியின் காலை கவ்வியது. குரங்கு குட்டி துணிச்சலுடன் செயல்பட்டு மான் குட்டியை சிறு காயத்துடன் மீட்டது.



பொறுமையாக மூன்றும் மீண்டும் நடக்க தொடங்கியது. அப்போது யானை சென்ற வழித்தடம் ஒன்று தென் பட்டது அந்த வழியே செல்ல தொடங்கியது. அந்த வழித்தடம் சிங்க ராஜாவின் குகைக்கு அருகில் சென்றது. அங்கு தேட சென்ற விலங்குகள் சிலரை மீட்டு வந்து ஒன்றாக கூடி இருந்தது. அதை கண்ட மூன்று குட்டிகளும் பெரு மகிழ்ச்சி அடைந்தது... மான் குட்டியும், முயல் குட்டியும் ஓடி சென்று தன் தாயிடம் சேர்ந்தது. அதை பார்த்த குரங்கு குட்டி ஆனந்த கண்ணீருடன் நின்றது. தேட சென்ற குரங்கின் தாயும் வந்தது தன் குட்டியை பார்த்ததும் ஓடி வந்து கட்டி அனைத்து கொண்டது. பின் தானும் அந்த குட்டிகளும் கடந்து வந்ததை கூறியது... அதை கேட்ட குரங்கின் தாய். அங்கு பார் மான் மற்றும் முயல் குட்டி இனத்தின் மகிழ்ச்சியை அந்த மகிழ்ச்சிக்கு காரணம் நீ என்பதில் பெரும் மகிழ்ச்சி அடைவதாக சொன்னது. ஆம் அம்மா பிறரை மகிழ்வித்து மகிழ்வதில் உள்ள மகிழ்ச்சி வேறு எதிலும் எனக்கு கிடைத்ததே இல்லை என்று குரங்கு குட்டி கூறியது. பின் அந்த இரவு மூன்றும் தன் இனத்துடன் சேர்ந்து மகிழ்ச்சியுடன் உறங்க சென்றது... ....மகிழ்வித்து மகிழ்....



கதை....
V. பாரதி MCA.
உளூர்.

படம்...
K. புஷ்பா MCA,
கா.புதூர்

# மணல் கொள்ளையடிக்கப் பட்ட ஆறுகளில்...

பகலில் பகலவனும்;
இரவில் சந்திரனும்
பல்லாங்குழி ஆடுகின்றனர்.
/
கூட்டத்தில்
தொலைந்த நீ
என்னைத் தேடுகிறாய்.
தொலையாத நான்
உன்னைத் தேடுகிறேன்.
/
என் புகைப்படத்தை
வெகுநேரமாய்
பார்த்துக் கொண்டிருக்கிறாய்.
அந்நேரத்தில்
நேரலைக் காட்சியாய்
மணிக்கணக்கில் உன் முகத்தை
ரசித்துக் கொண்டிருக்கிறது
உன் தொடுதிரை அலைப்பேசி.
/
எப்போதும் விடாது
துரத்தும் காற்றுக்கு;
நாம் எல்லோருமே பாக்கி
நிலுவை வைத்திருக்கிறோம்.
/
விண்மீன்களை
தொலைத்தது யாரென்று
பகலுக்கும் தெரியாது.
/
பார்வையால் அங்குலம்
அங்குலமாய்க் குத்திக் கிழிக்கும்
போதே தெரிகிறது.
உனக்குக் காதல்
எவ்வளவுப் பிரியமென்று.
/
ஓடிக் கொண்டிருக்கிறேன்
பாதையும் நின்றபாடில்லை
என் ஓட்டம் நின்றபாடில்லை.
/
நீ இதயத்தைத் தருவதாக
இருந்தால்; நான் மாட்டேனென்று
சொல்லமாட்டேன் உன் காதலை.
/
உன் நளினங்களைச் சுடச்சுட
ஆவி பறக்க அதிகாலை
தேநீர் கோப்பையில்...!
/
இன்னும் உயிர்ப்பிக்க வில்லை
உன் வருகையின் தாமதத்தால்
என்காதல் கவிதை.
/
எனக்குத் தெரியும்
என்னைப் போலவே
தனிமையிலிருக்கும் நீயும்
இந்த இரவைச் சபித்துக்
கொண்டிருப்பாய்.
/
தெருக்குழாய்க்கு
நீர்ச்சுருக்கு.
கோடை காலம்.
/
பசியில்
எரிகிறது ஏழையின் வயிறு
புளியேப்பத்தில் பணக்காரன்.
/
கழிவுநீரில்
அழகாய் மிதக்கிறது
ஆகாயம்!
/
உன்னை மறக்க நினைக்கும்
தருணத்திலும் உன்னையே
நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

/
ஆகாயத்திற்கு உறவென்று
சொல்லிக்கொள்வதில்லை.
பகல்பொழுதில் விண்மீன்கள்.
/
தூரத்தில் தெரிவது
விளக்கென்று நினைத்தேன்.
பக்கத்தில் ஒளிர்கிறது மின்மினி!
/
என் விசும்பலை யாரும்
கேட்க வேண்டாம்.
சத்தமின்றி அழுதுகொள்கிறேன்.
/
அகப்பொலிவு கூடிடும்.
இன்னும் கொஞ்சம்
வெட்கப்பட்டுச் சிரி.
/
எக்காலத்திலும்
பழுதாவதில்லை
காலம்...!
/
அமைதியாக இருந்தாலும்
எங்கெங்கோ
அழைத்துச் செல்கிறது மனசு.
/
பல துளிகள் விழுந்ததில்
நினைவிலில்லாமல் போனது
முதல்துளி.
/
பழம் சுவைக்க விரும்பிய
மண்ணின் ஆசையை
நிறைவேற்றி வைத்தது
மரத்தை உலுக்கிய காற்று.
/
பசியால் அழும் குழந்தை
வற்றிய மார்போடு
நிலா பார்க்கும் தாய்.

/
ஓடி வந்த காற்று
முதலில் ருசிபார்த்தது
பூவின் வாசத்தை...!
/
இருண்ட வானத்திலிருந்து
வழியும் நட்சத்திரங்களை
ஒன்று விடாமல் சேகரிக்கிறேன்.
நிரம்பிக் கொண்டிருக்கிறது
என் கனவுக் கோப்பைகள்.
/
உறக்கம் தொலைத்த இரவு
ஆசுவாசமாக
உறங்கிக் கொண்டிருக்கிறது
பகலின் மடியில்...!!
/
என்னிருத்தலின்
கணங்களிலிருந்து
கொஞ்சம் ஒதுக்கி
உன்னோடு
சிரிக்கவும் பேசிடவும்
காத்திருக்கிறேன்.
உன்னிருத்தலின்
கணமின்றி
அசுரவேகத்தில்
இயங்கிக் கொண்டிருக்கிறாய்
உனக்காக மட்டும்.

--

பாரியன்பன் நாகராஜன்
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353



# அம்மாவின் சாவு

*

பூத்த பனைமரமாம்
புனிதமுள்ள நந்தவனம்
புத்தி இருட்டாக
புயல்காத்து மரம்சாய்க்க
பொட்டுவச்ச என் தாயி
புறப்பட்டுப் போனது வேறுநாடு

காய்ச்ச பனைமரமாம்
கருணையுள்ள நந்தவனம்
கண்ணு இருட்டாக
கடுங்காத்து மரம்சாய்க்க
கட்டுக்கழுத்தி என் தாயி
காணாமல் போனது வேறுநாடு.

*

பட்டயம் எழுதிவச்சி
பாக்கியமா வந்தராணி
பந்தத்தோட ஒன்னுமன்னா
பாடுபட்டு நின்னசாமி
பாதையெல்லாம் பூத்தூவ
பரலோகம் போனதென்ன

வாசகம் எழுதிவச்சி
வாரிசா வந்தராணி
வம்சத்தோட ஒன்னுமன்னா
வாக்கபட்டு நின்னசாமி
வழியெல்லாம் பூத்தூவ
வசந்தலோகம் போனதென்ன

*

கழுத்துல செயினு ரண்டு
கம்மலு தோடு ரண்டு
கைநெறைய தங்கத்தோட
கல்யாணம் ஆனமக
காலன் அழைச்சானு
காட்டுவழி போறதெங்க

மாருல செயினு ரண்டு
மாட்டலு ஜிமிக்கி ரண்டு
மடிநெறைய தங்கத்தோட
மணமாகி வந்தமக
மரணம் அழைச்சானு
மாத்துவழி போறதெங்க

*

ஒத்த புளியமரம்
உலுக்கனா வண்டிவரும்
உள்ளம் கலங்கிவந்தா -எனக்கு
உறியில சோறுவரும்
உத்தமி போனபின்ன
ஒருவாய்க்கு ஏங்குறனே

கட்ட புளியமரம்
காய்ச்சா வண்டிவரும்
கண்ணு கலங்கிவந்தா -எனக்கு
கைநிறைய சோறுவரும்
கண்ணகி போனபின்ன
கடவாய்க்கு ஏங்குறனே

*

பொறந்த இடம் நன்னாடு -எங்கம்மா
புகுந்த வீடு பொன்னாடு
பொறுமை உள்ள என்தாயி
பொங்கிவச்சா ஊருவரும்
புங்கை மரம் வாடிப்போக-நீ
போறயிடம் சுடுகாடு

வளர்ந்த இடம் நன்னாடு -எங்கம்மா
வாய்ச்ச வீடு பொன்னாடு
வசதி உள்ள என்தாயி
வடிச்சிவச்சா ஊருவரும்

வாழைமரம் வாடிப்போக -நீ
வாழுமிடம் சுடுகாடு

*

படுக்க பஞ்சுமெத்த
பாலருந்த வெள்ளிச்சொம்பு
பட்டுப் பொடவைகட்டி - எங்கம்மா
பாதையில நடந்தாக்கா
பக்கம்நின்னு ரசிப்பாங்க
பார்வதியா மதிப்பாங்க
பச்சைக் கீத்துப் பிண்ணி
பல்லக்கில போகையில
பாதையெல்லாம் கள்ளுமுள்ளு
பாலாறாய் கண்ணீரு

உறங்க பஞ்சுமெத்த
உணவுண்ண வெள்ளித்தட்டு
ஒசந்த பொடவைகட்டி-எங்கம்மா
ஊருக்குள்ள நடந்தாக்கா
ஓரம்நின்னு ரசிப்பாங்க
உமையவளா மதிப்பாங்க
உதிரி பூவு சிந்தி
ஊர்வலமா போகையில
ஊரெல்லாம் கள்ளுமுள்ளு
ஊற்றாகும் கண்ணீரு

*

பொட்டி வண்டி கட்டி
பொருத்தமுள்ள தாலிகட்டி
பூந்தோட்டம் பூத்திருக்க
புகுந்த வீடு வந்தராணி
பொழுது சாயுமுன்னே
பொண்ணுங்களைத் தவிக்கவிட்டு
போனயிடம் சொல்லலையே

மாட்டு வண்டி கட்டி
மதிப்புள்ள தாலிகட்டி
மாந்தோட்டம் பூத்திருக்க
மணந்த வீடு வந்தராணி
மாலை சாயுமுன்னே
மக்களைத் தவிக்கவிட்டு
மறைஞ்சயிடம் சொல்லலையே

*

கச்சக் கருவாடு
கைநிறைய நெல்சோறு
கண்ணுக்குள்ள வச்சிருந்து
கருத்தா வளர்த்தமக
காய்ஞ்ச சீமைக்கு
கழுத்துநீட்டிப் போனேனே
காய்ச்சல் தீருமுன்னே
கலங்கிவந்து சேருமுன்னே-என்
கண்ணம்மா போனயிடம்
காதில்வந்து சேரலையே

வாளக் கருவாடு
வாய்நிறைய நெல்சோறு
வம்சத்துள வச்சிருந்து
வசதியா வளர்த்தமக
வறண்ட சீமைக்கு
வாக்கப்பட்டுப் போனேனே
வறட்சி தீருமுன்னே
வதங்கிவந்து சேருமுன்னே -என்
வள்ளியம்மா போனயிடம்
வாசல்வந்து சேரலையே

*

அச்சுத் திருகாணி
அரைபவுனு மூக்குத்தி
ஆத்தங்கரை தாண்டி
அசதியா வந்துநின்னு
ஆசைவுள்ள பொறப்புக்கிட்ட
அருந்த தண்ணிக்கேட்டன் - எம்மா
அண்டா எரவயின்னான்

ஆத்துத் தண்ணி தூரமின்னான்

குச்சித் திருகாணி
குண்டுமணி மூக்குத்தி
கொளத்தங்கரை தாண்டி
கொதிக்க வந்துநின்னு
கொணமுள்ள பொறப்புகிட்ட
குடிக்கத் தண்ணிக்கேட்டன் -எம்மா
குண்டா எரவயின்னான்
கொளத்துத் தண்ணி தூரமின்னான்.

*
பொன்னி அரிசி சோறு
பொரியலோடு சாப்பாடு
பொறந்த வீடுதாண்டி - நான்
போனயிடம் எறங்காடு
பொழப்ப பார்த்துநின்னு
பொழுதோட வீடுவந்தன்
பொறுமவுள்ள என் தாயி
பொதச்சயிடம் காட்டலையே

வரகு அரிசி சோறு
வறுவலொடு சாப்பாடு
வளர்ந்த வீடுதாண்டி -நான்
வாழுமிடம் வங்காடு
வாழ்வ பாத்துநின்னு
வழியோட வீடுவந்தன்
வசதியுள்ள என்தாயி
வச்சயிடம் காட்டலையே.

வண்ணம் வற்றிய வாழ்வு

உழுதுவாழ இடமில்லை
அழுதுவாழ விழிகளுண்டு
உழுகுடியின் வாழ்விலும் வயலிலும்
விதைக்கையில் வியர்வை
அறுக்கையில் துயரம்
விற்கையில் கண்ணீர்
விடிகையில் புலம்பல்
விவசாயம் செய்ய
இயந்திரம் வந்தபோது
அதிசயமாய் வேடிக்கைப் பார்த்தவர்
வாழ்வு
கண்ணெதிரில் மொத்தமும்
களவுபோனது
அப்பாக்கள் மாடுகளைத் தொலைத்துக்
கொட்டகையோடும்
ஏர்க்கலப்பைகளோடும்
வற்றிய வயிற்றோடும் மிச்சமானார்கள்
பரம்பரை நிலத்தைப்
வந்தவிலைக்கு விற்று
பட்டிணத்தில் குடியேறினர் பிள்ளைகள்
பழகிய இடங்களில்
குற்றுயிரும் குலையுயிருமாய்
கோவணத்தோடு அலைகின்றனர்
அப்பாக்கள்
அம்மாக்கள் மம்முட்டி அரிவாளோடு
ஏரிவேலைக்குச் செல்ல
கானாங்கோழை வளர்ந்து
கரம்பாகிக் கிடக்கிறது
பாட்டன் பூட்டன் பராமரித்த
பரம்பரை நிலம்
கரிசல்களில் வெடித்துச்சிரிக்கும்
மானாவரிப் பருத்தி
செடிநிறைய செழித்திருக்கும்
உளுந்து மல்லாட்டை
வண்டல்மண் காட்டில்
வண்டிவண்டியாய் வெட்டி
சந்தைக்கு ஏற்றிப்போகும்
சக்கரை வள்ளிக்கிழங்கு
வரகும் தினையும் சோளமும்
நெருங்க விளைந்த இடமெல்லாம்
நின்றிருக்கும் வீடுமனை கற்கள்
விவசாயி மார்பெலும்பில்

கிழிந்துகாயும்
வண்ணம் வற்றிய வாழ்வு
பால்யத்தின் இரம்மியங்களை அசைபோட்டு
அடுக்குமாடி வீடொன்றின்
சாளரத்தின் ஓரம் நின்று
கன்னம் தேய்க்கையில்
நிலத்தின்மீதும் உழவின்மீதும்
உயிராய் இருந்த அப்பாவின் சோற்றில்
கண்ணீராய் உப்புண்டு
காரமாய் வயிற்றெரிச்சல் உண்டு
சுயநலத்தின் பொன்வலையில்
சிக்கித்தவிக்கும் நம் குருதியிலும்
மானமில்லை ஈனமில்லை
மருந்துக்கும் ஒரு மண்ணுமில்லை.

–

பொன். தெய்வா,
ஐவேலி ,
விழுப்புரம் மாவட்டம்.



# மாரியாள் மலரும் சமத்துவம்..

தலைப்பை கண்டவுடன் ஏதோ ஆன்மீக கட்டுரை என்ற என்னம் மேலோங்கும்.. அது இயல்பே... ஆனால் இது சமூதாய முன்னுதாரண கட்டுரை..

மாரி என்ற சொல்லாடல் தமிழகம் எங்கும் பிரசித்தமே, மக்களுள் மக்களாக வாழ்ந்து ஊர் நன்மைக்காக அல்லது பிறர் நன்மைக்காக தன் உயிரை துச்மாக எண்ணி உயிர் தியாகம் செய்த பெண்களை தெய்வமாக மாரியம்மன் என்று அழைக்கின்றனர். சிலரின் குடும்ப தெய்வங்களாக பலரின் இஷ்ட தெய்வமாக இந்த மாரியம்மன் உள்ளால்..

மாரி என்றால் மழை .. பண்டைய தமிழ் நாகரிக நிலங்கள் பாகுபாட்டில் மருத நில மக்கள் மழையை அடிப்படையாக கொண்டு தங்கள் வாழ்வாதாரத்தை வடிவமைத்து கொண்டனர். மழையை பெண் தெய்வமாக பாவித்து மாரியம்மனாக வழிபட்டனர் என்ற சரித்திர சான்றுகளும் சில உண்டு..

சோழர்கள் காலத்தில் கூலி திருவிழா என்று ஆண்டுக்கு ஒரு முறை தை அறுவடைக்கு பின் கொண்டாடிய சான்றுகளும் கல்வெட்டுகளும் உண்டு.

குறிப்பாக நடுநாட்டு மக்கள் மாரி குறி என்ற வழக்கு கொண்டு மாரி வழிபாடு கொண்டு இருந்தனர்.

அது என்ன மாரி குறி என்ற கேள்வி உங்களுக்கு வரலாம். மாரி திருவிழாவானது ஆண்டுக்கு ஒரு முறை கொண்டாடப்படும். அன்று சமய வேற்றுமைகள் கடந்து, சமுதாய வேற்றுமைகள் கடந்து மக்கள் ஒன்று கூடி பொங்கல் இட்டு சில கடபலிகள் அதாவது மாமிசம் சமைத்து அம்மனுக்கு படயல் இட்டு ஆடி பாடி தங்களுக்குள் உள்ள வேற்றுமைகளை மறந்து அன்போடு உள் உணர்வுடன் ஒற்றுமையாக இருப்பார்கள். அன்று திருவிழாவை முன் எடுத்து நடத்தும் பூசிபாளன் (பூசாரி) மீது அம்மன் அருள் வந்து எதிர்கால ஊர் நலன் ஆட்சி நலன் பற்றி கூறுவார். அது மாரி குறி என்று சொல்லுவர். மாரி குறி சொன்னவுடன் அதை முன்னெடுத்து அந்த வருடத்துக்கான ஊர் தீர்மானங்கள் முடிவெடுக்கபடும்.

அவ்வாறு அதில் சமய சார்ந்த சண்டைகள், சமுதாய சார்ந்த விவகாரங்கள் மாரியென் முன் பரிசீலிக்க படும் மாரி குறியேல் குறிப்பிடப்படும் தீரிவுகளுக்க அனைவரும் உடன்பட்டு நடப்பர்... காலப்போக்கில் இது ஊர் பஞ்சாயதாக உருமாற்றம் பெற்று அதற்கு தலைவர்கள் நியமிக்க பற்றார்கள். பெரும்பாலும் பூசிபாளளர்கள் தான் ஊர் குறி கூறுவர். அதை கேட்டு சில தீர்க்க முடியாத நிலைகளை தலைவர்கள் தீர்வு காண்பர்.

காலப்பரிமாற்றதால் சில மாறுதல்கள் பெற்று இபொழுதும் சில ஊர்களில் இந்த மாரி

வழிபாடு நடந்தேறி வருகின்றது. கடலூர் மாவட்டம் பெண்ணாடம் என்னும் ஊரில் கடந்த கால முறைகளை அடிப்படையாக கொண்டு தை மாதத்தில் மாரி வழிபாடு விமர்சையாக கொண்டாட படுகின்றது.

இங்கு அறுகாமையைல் இருக்கும் சமயபுரம் மாரியம்மனை இஷ்ட தெய்வமாக கொண்டு வழிபாடு மேற்கொள்ள படுகின்றது. வழிபாட்டின் போது சமுதாய வேற்றுமைகளை கடந்து எல்லாரும் ஓர் மக்கள் என்ற அடிப்படையில் மஞ்சள் ஆடை தரித்து ஆடம்பரம் அற்ற மஞ்சள் மணிகள் கொண்டு புனையப்பட்ட மாலைகளை அணிந்து விரதம் இருக்கின்றனர்... மாலை அணிந்து 7 ஆம் நாள் சுமார் 90 கிமீ தொலைவுள்ள சமயபுரம் என்ற ஊருக்கு நடை பயணம்மாக பயணம் மேற்கொள்கின்றனர்.

நாள் ஒன்றுக்கு 30 கிமீ தூரம் நடந்த குழுவாக ஓர் இடத்தில் தங்குகின்றனர். அவ்வாறு தங்கும் போது சாதி சமுதாய வேற்றுமைகளை கடந்து அனைவுறும் ஓர் குடும்பம் என்ற முறையில் ஒரே சமயல் லாக சமைத்து உண்கின்றனர். சமய கடதல்களை கடந்து ஓர் தாய் பிள்ளைகளாக மாரியை தாயாக ஏற்று நடகுன்றனர். இவர்களை வழி நடத்தும் தலைவரை குரு என்றும் அவரை குடும்ப தந்தையாக மதித்து அவர் சொல்படி நடக்கின்றனர்.

சிருவாசூர் என்னும் ஊரில் தங்கும் போது அங்கு பண்டைய கூலி வழிபாட்டு முறையை மேற்கொள்கின்றனர். அன்று இரவு ஜோடித்த கரகம் முன் வேற்றுமைகள் கடந்து ஆடி படி அம்மனை வழிப்படுகின்றனர். அன்று கூலி குறி சொல்லப்படுகின்றது. அதை மிகவும் பயபக்தியுடன் பின்பற்றுகின்றனர்.

பின் அம்மனை வழிபட்டு ஊர் திருபியவுடன் பொது படையல் இட்டு சாதி சமுதாய வேற்றுமைகள், ஏற்ற தாழுவுகளை கடந்து ஒற்றுமையாக உண்டு விடை பெறுகின்றனர்.

மதம், சாதி என்ற போர்வையில் சமுதாயம் சீர்கெட்டு இருக்கும் நிலையில் இது போன்ற ஒரு வழிபாடு மற்றும் கலாச்சாரம் தேவை தான் படுகின்றது. வன்மங்கள் கொண்ட மணங்கள் வண்ணங்கள்லாகா மாற... மாரி வழிபாடு அவசியமே.

மாரியால் மலருட்டும் சமத்துவம்...



–

கவிபாரதி. சதிஷ்

## மனதை ஆர்ப்பக்கிறது கைத்தொடும் அலை ....!!!

சீர்கொண்டு வருகிறது அலையோடு
நுரை
சூரியனிடமிருந்து சிவப்பு கம்பளம்
போர்த்திகொண்டது கடல்...!!!
கடலில் குதித்தும் சூடு தனியவில்லை
கதிரவனுக்கு......!!!!

## மனதை வருடும் மயிலிறகே

மனம் உவந்து வாயென் அருகே //
மல்லிகை மணங்கொண்ட நங்கையே
மருதாணியின் தங்கையே //
நேர்த்தியாய் செய்த சிலையென
அங்கம் விளைந்து நிற்பவளே
அன்பை ஊற்றி ஆராதனை
செய்பவளே
காதலை எனக்குள் ஊற்றி
உயிரானவளே....!!!
மூணு முடிச்சால் என்னை முழுமை
படுத்தியவ (னே)ளே.......!!!

## தோட்டம் நிறைய பூக்கள்

பறிக்கையில் சப்தம்
ரீங்காரமிடும் தேனீக்கள்....!!!

1) கரடுமுரடான பாதையில்
கவலையின்றி பயணிக்கிறது
எறும்புகள் கூட்டம்.....!!!

2) திறந்து இருக்கிறது
வண்டின் ரீங்காரம் கேட்க
பூவின் செவி மடல்கள்....!!!

3).வெற்றிடத்தை நிரப்புகிறது
மேஜை வந்தமர்ந்த
பறவை...!!!

4). தோட்டம் நிறைய பூக்கள்
பறிக்கையில் சப்தம்
ரீங்காரமிடும் தேனீக்கள்....!!!

## காதல் சிட்டு

குழந்தை மனதில்
ஆசையை கூட்டி விட்டு
கையில் பிடிக்கும் நேரம்
பறந்து விடும் பட்டாம்பூச்சியாய் .... .

என் நெஞ்சில்
காதல் ஆசையை தூவிவிட்டு
சிறையெடுக்கும் நேரம்
சிட்டாய் பறந்துவிடுகிறாய் நீ ...........!!

## விற்கப்பட்டதும்

தரமற்று போனது
ஏழைக்கு கல்வி எட்டாக்கனியே .....!!!

–

ச. இராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்,
கைப்பேசி: 8867933021.

## அல்லாஹு அக்பர் போட்ட பிள்ளையார் சுழி!

மதவெறி பிடித்த
ஓநாய் கூட்டத்தின் நடுவே
ஹிஜாப் அணிந்து
பீடு நடையுடன் கர்ஜித்த
சிங்கப்பெண்!

தாலிபான்களால் மலாலாக்களும்
நூலிபான்களால் ஃபாத்திமா
பீவிக்களும் புஸ்கான்களும்
தாக்கப்படுவது தொடர்கதைக்கு
முற்றுப்புள்ளி வைக்கப்போவது நம்மில்
யார்?

மநுவின் கோரப்பசிக்கு இரையாகிறது
இந்தியா!

சனாதன அரக்கன் மானுடத்தைப்
புசித்துக் கொண்டிருக்கின்றான்!...

கோட்சேக்கள் கோலாகலமாகக்
கொண்டாடப்படுகிறார்கள்.

ராம நாமம் உடன்பிறவா
சகோதரர்களின் குருதியில்
தீட்டப்படுகிறது...

பிரமாண்ட சிலைகளின் கட்டுமானத்தில்
வீணாகும்
ஏழை மக்களுக்கான
பல பருக்கைகளும் சில கனவுகளும்.

மனிதகுல விரோதி நாஜி ஹிட்லரின்
வதை முகாம்களைப் போலிருக்கின்றன
எஞ்சிய வாழ்வு!

வெறுப்பரசியலால் அமோகமாக
அறுவடை செய்யப் பார்க்கிறார்கள்
நாட்டைச் சூறையாடும் நாசகார கும்பல்

கல்விக்கூடங்கள்
காவிக்கூடங்களாகும் கொடூரம்!

பிஞ்சு இதயங்களில்
மதமெனும் கொடும்நஞ்சு.

நீதிகூட நூலளவில் வேறுபடுகிறது...

ஒவ்வொரு தேர்தலின்போதும்
ஒவ்வொரு விதமாக வெடிக்கின்றன
மதவெடி குண்டுகள்.

மூடரின் சீடர்களால்
மூர்க்கத்தனமாகக்
கடைபிடிக்கப்படுகிறது
அறிவுத் தீண்டாமை!

இருண்ட காலத்தில் இந்தியா!
இது களப்பிரர் காலமல்ல
கலவரக்காரர்கள் காலம்.

அது நறுமண மலரே அல்ல; நச்சு முள்!

முட்களுடன் மோதினால்தானே
முடிவில் ரோஜா கிடைக்கும்.

அல்லாஹு அக்பர்
பிள்ளையார் சுழி போட்டு விட்டது
பிறகென்ன உனக்கும் எனக்கும்!

–

அமுதாராம்,
மன்னார்குடி.

# பட்டினப்பாலை காட்டும் காவிரி அழகு



இளவரசி
இளங்கோவன்

திறவுகோல் வாசகர்களுக்கு அன்பின் வணக்கங்கள். கடந்த இதழில் குறிப்பிட்டிருந்ததை போல காவிரியின் பெருமையை, அழகை பட்டினப்பாலையின் வழியாக பருகுவோம் வாருங்கள்.

301 வரிகளைக் கொண்டதும் ,வரலாற்று ஆய்வாளர்களுக்கும், சமூகவியல் நோக்கர்களுக்கும், இலக்கிய ஆர்வலர்களுக்கும் மற்றும் மொழி ஆராய்ச்சியாளர்களுக்கும் மிகவும் விருப்பமானதும், பயன்தரத்தக்கதுமான நூல்களில் பட்டினப்பாலையும் ஒன்று. உள்ளதை உள்ளபடியே கண்ணாடி போல காட்டுவது சங்க இலக்கிய நூல்களில் காணப்படும் இயல்பு.

கரிகால் பெருவளத்தான் திருமாவளவன் ஆண்ட காவிரிப்பூம்பட்டினத்து நிலப்பரப்பை அழகுபடக் குறிப்பிடுகிறது பட்டினப் பாலை.

பாடல் துவக்கமாக காவிரியின் சிறப்பை அமைத்துக் கூறும்போது, 'வான்பொய்ப்பினும் தான்பொய்யா மலைத்தலைய கடற் காவிரி' என்று காவிரி பாய்கிற வெள்ளப் பெருக்கு போல் நயமும் மொழிநடையும் இருப்பது கண்டு மகிழ முடியும்.

இப்படி நூல் முழுவதும் படித்து ரசிக்கக் கூடிய வரிகள் ஏராளம். தமிழின் மிகப் பெரிய கருவூலத்தில் இந்நூலும் ஒன்று. அது பற்றி தமிழர் என பெருமை கொள்ளும் நாம் தெரிந்து கொள்வது தானே முறை.

இன்று கர்நாடக மாநிலத்திற்கு மட்டும் உரிமையுடையது போன்ற சூழல் அரசியல்வாதிகளால் உருவாக்கப்பட்டுள்ள வறண்ட காலத்தில் மட்டும் தமிழக மக்களால் காவிரி என்ற சொல் ஒலிக்கும் சொல்லாக உள்ளது காவிரி. ஆனால் காவிரியின் வரலாற்றைப் பார்க்கும்பொழுது காவிரிக்கும் காவிரி மீட்பு குழு அமைத்து காவிரித்தாயை மீட்கும் நிலையில் இன்று போராடும் தமிழ்நாட்டிற்குமான தொடர்பு மற்றும் உரிமை பன்னெடுங்காலமாக உள்ளது என்பதனை விளங்கி கொள்ள முடியும்.

"நீயே தண்புனல் காவிரிக் கிழவன்" (புறம்)
"கரிகாலன் காவிரி சூழ் நாடு" (பொருநராற்றுப்படை- பிற்சேர்க்கைப் பாடல்)
"காவிரி அணையும் தாழ்நீர்ப் படப்பை

நெல்விளை கழனி அம்பர்'' (புறம்- 385:8-9)

முதலான சங்க இலக்கிய பாடலடிகள் காவிரியாற்றின் உரிமையாளர்களாகப் பண்டைத் தமிழ்ச் சோழ மன்னர்கள் இருந்துள்ளதற்கு சான்று.

'' பிண்ட நெல்லின் உறந்தை யாங்கண்
''கழைநிலை பெறாக் காவிரி நீத்தம்'' – (அகம்.-6)
''கழையளந் தறியாக் காவிரி'' (அகம். 32)
'' கழைமாய் காவிரி'' (அகம். 10)
''கழல்கால் பண்ணன் காவிரி வடவயின்'' (அகம். 177)
''பல்வேல் மத்தி கழாஅர் முன்றுறை'' (அகம். 226)

என்னும் பாடலடிகள் காவிரி ஆழமான நீர்நிறைந்தோடும் சிறப்போடு விளங்கியதை நினைவூட்டும். இன்று வறண்டு கிடக்கும் மணல்வெளியைக் காண்போர் இவ்வரிகளை நம்புவது கடினம்

வசையில்புகழ் வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான்பொய்ப்பினும் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்

விளைவறா வியன்கழனிக்
கார்க்கரும்பின் கமழாலைத்
தீத்தெறுவிற் கவின்வாடி
நீர்ச் செறுவின் நீள் நெய்தல்
பூச்சாம்பும் புலத்து ஆங்கண்,
காய்ச் செந்நெல் கதிர் அருந்து
மோட்டு எருமை முழுக் குழவி
கூட்டு நிழல் துயில் வதியும், (15)

கோள் தெங்கின், குலை வாழை,
காய்க் கமுகின், கமழ் மஞ்சள்,
இன மாவின், இணர்ப் பெண்ணை,
முதல் சேம்பின், முளை இஞ்சி

குற்றம் இல்லாத, புகழையுடைய, விளங்குகின்ற வெள்ளி என்ற கோள், திசை மாறி, தான் நிற்க வேண்டிய வட திசையில் நிற்காமல் தென் திசைக்கண் போனாலும், நீர்த்துளிகளை உணவாகக் கொண்ட வானம்பாடி வருந்துமாறு, மழை பெய்தலைத் தவிர்த்து, வானம் பொய்த்தாலும், தான் பொய்யாது, குடகு மலையின்கண் துவங்கி, கடலில் புகும் காவிரி ஆறு. அது தன்னுடைய நீரைப் பரந்து நிலத்திற்கு வளமையைச் சேர்க்கும்.

இங்கு வயங்கு வெண்மீன் என்று கூறப்படுவது சுக்கிரன் எனப்படும் குற்றம் இல்லாத, புகழையுடைய வெள்ளி என்ற கோள் (கிரகம்) ஆகும். இந்த வெள்ளி தான் வழக்கமாகச் செல்லும் பாதையினின்றும் திரிந்து திசை மாறி, தான் நிற்க வேண்டிய வட திசையில் நிற்காமல் தென் திசைக்கண் போனால மழை பொய்த்து போகும். இங்கு பேசப்படும் வானவியல் தமிழரின் தொன்மையை பறை சாற்றுகிறது. எப்போது மழை பொய்த்து போகும் என கோளை வைத்து கணித்திருக்கிறார்கள் நாம் முன்னோர்கள்.

‘தளி’ என்பது மேகத்திலுள்ள நீர். வானம்பாடி நீராக உண்ணுவது இந்தத் தளிநீரை மட்டுமே. நீர்த்துளிகளை உணவாகக் கொண்ட வானம்பாடி பறவைகள் , மழை பெய்தலைத் தவிர்த்து, வானம் பொய்த்தால் வருந்துகின்ன்றன.

அவ்வாறு வானம் பொய்த்தாலும், காவிரியாறு தொடர்ந்து ஓடிவந்து சோழநாட்டு மக்களைக் காக்கும் தாயாக விளங்கியதால் "பொய்யாக் காவிரி" என்கிறார் உருத்திரங்கண்ணனார். காவிரியாறு குடகு மலையில் தோன்றிக் கீழைக் கடலில் கலக்கிறது என்பதை “மலைத்தலையக் கடற்காவிரி” என்பர்.இது அணைகள் கட்டப்படாத அன்றைய காவிரி.

குடகு மலையின்கண் துவங்கி, கடலில் புகும் காவிரி ஆறு. அது தன்னுடைய நீரைப் பரந்து நிலத்திற்கு வளமையைச் சேர்க்கும். மழை இல்லாவிட்டாலும் காவிரியில் நீர் நிறைந்து கழனியில் பொன்னைப் போல விளைச்சல் பெருகும். வானம்பாடி நீரின்றித் தேம்பினாலும், காவிரியில் புனல் பாய்ந்து பொன் கொழிப்பது தவறுவதில்லையாம். காவிரித் தாய்க்குத் தலை, தலைக்காவிரி தோன்றும் இடம் குடகுமலை.

இப்படி காவிரி பொய்க்காத காவிரி பூம்பட்டினத்தின் வளமான காலனிகளில் என்னென்ன விளைந்தன தெரியுமா?

விளைச்சல் நீங்காத அகன்ற வயல்களில் கருமை நிறமான முதிர்ந்த கரும்புகள் குறைவில்லாமல். கரும்புகள் இன்று ஆலைகளுக்கு விற்கப்படுகின்றன. தொழில் புரட்சியில் தான் மேற்கத்திய உலகத்தால் ஆலைகள் உருவாக்கப்பட்டன என எம்முள் விதைக்கப்பட்ட வரலாறு, மூலத்தை அறியும்போது பொய்த்து போகிறது இங்கு.

ஆலைகள் கட்டி கரும்பு பாகு காய்ச்சியத்தை புலவரின் பின்வரும் வரிகளால் அறியலாம்.

மணமுள்ள பாகைக் காய்ச்சும் ஆலைகளின் நெருப்பின் புகைச் சுடுவதால், அழகு கெட்டு, நீரையுடைய வயல்களில் பூத்து கிடக்கும் நீண்ட நெய்தல் மலர்கள் வாடி விடுகின்றன. அந்த இடத்தில், காய்ந்த செந்நெல்லின் கதிரைத் தின்ற வயிற்றையுடைய எருமையின் முதிர்ந்த கன்றுகள் நெற்குதிர்களின் நிழலில் உறங்கும்.

நெற்குதிர்களின் நிழலில் எருமைகள் உறங்குவது என்றால் ஒவ்வொரு நெற்குதிர்கள் என்ன அளவில் உயரத்தில் இருந்திருக்கும் என்பதை கணக்கிட்டு கொள்ளுங்கள்.

குலைகளையுடைய தென்னையினையும், குலைகளை உடைய வாழையினையும், காயையுடைய கமுகினையும், மணங் கமழும் மஞ்சளையும், பல இனமான மாமரங்களையும், குலைகளையுடைய பனையையும், கிழங்கையுடைய சேம்பையும், முளையையுடைய இஞ்சியையும் உடையன மருத நிலங்கள் என்ற கூற்றின் மூலம் என்னென்ன விளைந்தன, எப்படி தரமான உழவு நடந்தது காவிரிக்கரையில் என்பது விளங்கும். இன்று இவையெல்லாம் இங்கேயே விளைவிக்காமல் இறக்குமதி செய்யப்படுவதையும் எண்ணிப்பார்க்கலாம்.

இதையெல்லாம் தெரிந்து கொண்டு பெருமைப்படலாம். வேறு என்ன செய்ய என்கிறீர்களா? இல்லை இனி காவிரிக்கு குரல் கொடுக்கும் அமைப்புகளுக்கும், மீட்பு குழுக்களுக்கும் உங்களின் குரலும் ஆதரவும் நிச்சயமாக ஒலிக்கும். ஒலிக்க வேண்டும். உண்மையான வரலாறு வாழும் தலைமுறைக்கு வழிகாட்டும். லட்சங்களை கொட்டி ஏமாந்து வெளிநாடுகளில் வேலை தேடும் எம் இளைஞர்கள் பொன்கொழிக்கும் மண்ணை பயன்படுத்தி சுயமாக சொந்தக்காலில் நிற்கலாம்.

அடுத்த திறவுகோல் இதழில் காவேரிப்பூம்பட்டினத்தின் கட்டமைப்பு, தெருக்கள், வீடுகள் எப்படி அமைக்கப்பட்டிருந்தன என்பதை பட்டினப்பாலை விளக்குவதை பார்க்கலாம். தங்களுடைய நேரத்திற்கும் வாசிப்பிற்கும் நெஞ்சம் கனிந்த நன்றிகள்.

–

## இளவரசி இளங்கோவன் (கனடா),

பரவாக்கோட்டை.

**பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.**

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
டணாணாணீ://ட்ச்டிணணாடச்ஞூடுச்டூ.ட்ச்ணணச்டி.டிண

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில்).

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு.

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்.

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது.

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு.

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்.

சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்

பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்.

நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி.

குழாய் பதிக்கும் பணி.

விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு.

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு.

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal

ThiravukolMagazine